" On the 30th and 31st, Government business would be to move a resolution to validate the Ordinance issued by the Governor imposing an additional tax on petrol. There is also a formal resolution to be moved for revalidating certain amendments to the District Municipalities Act. After that, the taxation Bills will be taken up. I have already given notice of motions to refer these taxation Bills to Select Committees. I had consultations with the hon. the Leader of the Opposition and he agrees with me that since the motions are for reference of the Bills to Select Committees, there need not be much of discussion at this stage. So, I hope the business connected with all these Bills, that is, the Bill relating to the levy of betterment tax, the Bill relating to the surcharge on land revenue, the Stage Carriages Surcharge Bill and also the Bill relating to the levy of the cess in the Lower Bhavani Project area, will be over by the 31st. We will disperse on the 31st. That is the present programme.

" On the 30th and 31st, the Legislative Council also will be meeting. Therefore, on those two days we will revert to our old programme of sitting between 8-30 a.m. and 1-30 p.m. so that the afternoons might be available for the Council sittings.

" Therefore, the Assembly will disperse on the 31st. My present inclination is to have a sitting of the House, if possible, on the 25th of August. This is only my present inclination but I will fix up the date in consultation with the hon. the Leader of the Opposition so that it may suit the convenience of all hon. Members."

* SRI T. VISWANATHAM :—" Sir, I want to submit only a few words for the consideration of the Leader of the House. I submit it will not be possible for the House to meet in the last week of August if the Bills are to be referred to Select Committees. They will take plenty of time to examine the Bills, take evidence and then finalize the Bills. I, therefore, suggest that we might meet again in the third or the fourth week of September. This will give sufficient time for the Select Committees to examine the Bills. Of course, this could be settled later."

* SRI V. BALAKRISHNAN :—" Sir, the Hon. the Leader of the House and the hon. the Leader of the Opposition proceed on the basis that the entire House is committed to sending the Bills

to the Select Committees. I wonder whether they are not aware of the notices of amendments for circulation of the Bills to elicit public opinion."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I am very well aware of them. Taking all these into consideration, two days are allotted for the business connected with the Bills."

SRI C. V. K. RAO :—" Sir, will the Hon. the Leader of the House tell us if any day has been allotted for non-official business? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Not at present, Sir."

VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1952-53—*cont.*

(2) DEMAND XXIII—HARIJAN UPLIFT—*cont.*

*SRI O. A. NANJAPPA :—" கனம் உபதலைவர் அவர்களே, வணக்கம் இன்றைய தினம் பட்ஜெட்டில் ஹரிஜனங்களுடைய நல உரிமைக்காக கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் கிராண்டு தொகையை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்த பட்ஜெட்டில் கண்டிருக்கும் 74 லட்சம் ரூபாயை செலவழிக்க கொண்டுவந்திருக்கும் கனம் மந்திரி அவர்களையும் நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். சிலர் சொன்னார்கள், தமிழ் தெரியாத ஒருவரை ஹரிஜன மந்திரியாக நியமித்திருப்பதால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்றும் அதை ஒரு விதத்தில் வெறுக்கத்தக்க விஷயமாக இருக்கிறது என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அது சம்பந்தமான எந்த அபிப்பிராயத்தையும் நான் எற்கவே இல்லை. எனென்றால் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு வசதி செய்துகொடுக்க கனம் ராஜாஜி அவர்களே வந்திருக்கிறார்கள். அவர் வந்ததும் முதலிலேயே எடுத்த ஆரம்பத்திலேயே பெரிய மாறுதலை உண்டாக்கி இருக்கிறார் என்பதை நாம் நன்கு அறிவோம். கடந்த மந்திரி சபையில் ஹரிஜனங்களுக்கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த காங்கிரஸ் ஆட்சியில் இன்னும் அநேகம் திட்டங்களை கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த திட்டங்களைக்கொண்டு வந்திருந்தும்கூட சில சந்தர்ப்பங்களில் நல்ல முறையில் பயன்படாமலிருக்கின்றன. உதாரணமாக ஆலயப் பிரவேசத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த ஆலயப்பிரவேச சட்டத்தை நடைமுறையில் அமுல் நடத்த கவர்ன்மெண்டு அதிகாரிகளும் மற்றும் பெரியார்களும் உதவுகிறார்கள். அவ்விதம் உதவியும் பொது ஜனங்களுடைய மனப்பான்மை மாறவில்லை. அதாவது ஜாதி ஹிந்துக்களுடைய மனப்பான்மை மாறவில்லை. நாம் கோவில்களை திறந்தோமே தவிர அவர்களுடைய மனக் கோவிலை திறக்கவில்லை. ஆகவே ஜனங்களை சட்டத்தினாலில்லாமல் அனுபவத்தில் மாற்றவேண்டும். ஆகவே ஹரிஜனங்களிடையே பிளவு இல்லாமல் இருக்கவே நமது கனம் ராஜாஜி அவர்கள் கனம் ஹரிஜன மந்திரி வேறு ஜாதியாராக அவர்களை நியமித்திருக்கிறார். அவருக்குத் தமிழ் தெரியாது. அவர் தெலுங்கர். நாம் சொல்வது அவருக்குத் தெரியாது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது நாம் தமிழில் சொல்வதைத் தெரிந்து கொள்ள அவர் பிரயாசப்படுவதின்மூலம் நமக்கு அவர் நன்மை செய்ய நல்ல சந்தர்ப்பம் ஏற்படுகிறது. முன்காலத்தில் ஹரிஜனங்களுக்கே இந்த மந்திரி பதவியை கொடுக்கப்பட்டுவந்தது. இப்பொழுதும் அவ்விதமே கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு நோயாளிக்கு மற்றொரு நோயாளி மருந்து கொடுப்பது போலிருக்கிறது. ஹரிஜன் ஒருவரை மந்திரியாக நியமித்தால் கல்வி பொருளாதாரத்தில் ஹரிஜனங்கள் முன்னேற்ற மடையவில்லையே என்றால் அவர்கள் பழைய பல்லவியைத்தான் பாடிவருவார்கள். ஆனால் இப்

[Sri O. A. Nanjappa] [23rd July 1952

பொழுது நமக்கு வந்திருக்கும் கனம் மந்திரி ஹரிஜனங்களுடன் தன் னுடைய பாதி வாழ்நாளை கழித்து உழைத்தவர். ஹரிஜனங்களுக்கு தொண்டு செய்தவர். அவருடைய குடும்பமே ஹரிஜனத்தொண்டில் ஈடுபட்டிருந்தது என்பதாகக் கேள்விப்பட்டு சந்தோஷமடைகிறோம். இன்னும் ஐந்து வருஷத்தில் ஹரிஜனங்களுக்கு தனிப்பட்ட முறையில் என்ன சேவை செய்ய வேண்டுமோ அதற்கு ஓர் சந்தர்ப்பத்தை அடைந்திருக்கிறார். ஹரிஜனங் களுடைய நன்மையைக்கோரி இன்னும் அதிகம் உழைப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. ஹரிஜனங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற காங்கிரஸ் கொள்கைப்படி கிராமங்களில் திட்டம் அமைக்கவேண்டும். அதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அதை கனம் ராஜாஜி அவர்களும் செய்வார் என்று நினைக்கிறேன்.

5 p.m. "ஹரிஜனங்கள் கல்வி பொருளாதாரம் இந்த இரண்டிலும் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால் இந்த எழுபத்தி நாலு லட்சமோ அல்லது ஒரு கோடி இருபத்தைந்து லட்சமோ செலவு பண்ணினால் அவர்களில் முன் னேற்றத்தைப் பார்க்க முடியாது. முன்னேற்றம் என்றால் ஜாதி ஹிந்துக் கள் இவர்களுடைய நிலையை உணர்ந்து அவர்களுடைய மனப்பான்மையை மாற்றி வரவேண்டும். சட்டத்தினால் மாற்றுவது என்றிருக்கக்கூடாது. கவர்ன்மெண்டு எந்தந்த திட்டம் கொண்டுவருகிறதோ அதை ஜாதி ஹிந்துக் கள் அனுசரிக்கவேண்டும். உண்மையாகவே ஹரிஜனங்கள் வாழும் சேரி களையும் தெருக்களையும் பார்க்கும்போது அங்கே மனிதன் வாழ்வதா அல்லது வீழ்வதா என்று தோன்றுகிறது. நாம் போய் சேரியின் நிலைமையை பார்த்துவிட்டால் சாப்பிட முடியாமல் போய்விடுகிறது. இந்த City-யில்கூட 4, 5 சேரிகள் அந்த நிலைமையில் இருக்கின்றன. நாராய ப்பா தெருவு, மூர் தெருவு, 2nd line beach, first line beach இவை களில் மனிதன் வாழமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். இந்த மாதிரி யாக டவுனில் இருக்கும்போது, கிராமங்களில் கேட்பானேன். City-யில் அநேகமாக மின்சாரம் ஜலதாரை வசதி இருக்கிறது. City-யிலேயே இம்மாதிரி கஷ்டம் இருக்கும்போது கிராமங்களில் எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

"இந்த மாதிரி ஹரிஜனங்களுடைய கஷ்டம் இருக்கும்போது அவர் களுக்கு பொது ஜனங்கள் உதவிசெய்யவேண்டும். கிராமங்களில் குடிசை களாவது இருக்கின்றன. ஆனால் மதராஸ் Cityயில் அவர்களுடைய நிலைமை சொம்பவும் வருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. கிராமங்களில் சாதாரணமாக மனிதன் தன் வீட்டிற்குள் மண்டி போட்டுக்கொண்டாவது உள்ளேபோகலாம். இங்கு அதுகூட இல்லை. இவ்விதம் சுமார் இரண்டாயிரம் ஏழை குடும்பங்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவர்களுக்கு மரத் தடிகூட இல்லை. இவர்களுடைய பிரச்னையை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு 74 லட்சம் ஒதுக்கி இருக்கிறது என்றால் இந்த City யிலுள்ளவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டும். சேரி யிலுள்ளவர்கள் நல்ல முறையில் வாழ்ந்தால்தான் பிறருடைய நல் வாழ் வுக்குதவியாக இருக்கும். சேலம், திருச்சி, முதலிய இடங்களிலிருந்து cityயைத் தேடிவருகிறார்கள். ஆனால் இங்கு அதைவிட மோசமாக இருக் கிறது. யாரும் இதை கவனிப்பாரில்லை. மதராஸில் வந்து பார்த்தால்தான் இவர்கள் அதிகமான கஷ்டத்திலிருப்பது தெரியவரும்.

"ஹரிஜனங்கள் விருத்தியடைய வேண்டுமென்றால் அவர்களுடைய சேரி கள் விருத்தியடையவேண்டும். அவர்களுடைய கல்வி விருத்தியடைய வேண்டும், பொருளாதாரம் விருத்தியடையவேண்டும், இப்பொழுது ஒதுக்கப் பட்டிருக்கும் ரூபாயை தலைக்கு 10, 5 என்று பிரித்துக்கொடுக்கிறதா ? உண்மையில் இந்த 74 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பது போதாது சுவாமி சகஜானந்தம் சொன்னமாதிரி 30 கோடி ரூபாயை ஒரே டயத்தில் ஒதுக்கவேண்டும். தலைக்கு இரண்டு எக்கர் நிலம் வாங்கிக் கொடுத்து உதவ வேண்டும். Forest தர்காஸ்து நிலங்களை எடுத்து அவர்களுக்கு அந்தந்த இடங்களில் கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய சௌகரியம் செய் வதற்கு தலைக்கு 150 ரூபாயும் கடனுகக் கொடுத்து அவர்களுடைய நிலையை உயர்த்தியடையும்படி செய்தால் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்காக

23rd July 1952] [Sri O. A. Nanjappa]

இருக்கக்கூடியவர்களுடைய நிலைமையை விருத்தியடையும்படி செய்யலாம் அதன்மேல் அவர்களுடைய பொளாதார நிலைமையை எற்றிக்கொள்ளலாம்.

"மற்றும் படிக்கின்றவர்களுக்கு அதிகப்படியான ஹாஸ்டல்கள் வைத்துக் கொடுக்கவேண்டும். ஆந்திர ஜில்லாக்களில் ஒவ்வொரு ஜில்லாவிலும் 40, 50 ஹாஸ்டல்களிருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் அதில் பாதிகூட இல்லை. புது ஹாஸ்டல்கள் ஒரு வருஷம் சரியாக நடக்கவில்லையென்றால் கிராண்டு கிடையாது என்று சொல்லுகிறார்கள். இது கஷ்டமானது. இப் பொழுது கல்வி மந்திரியும், ஹரிஜன மந்திரியும் ஒருவராக இருப்பதால் தமிழ் நாட்டின் குறைகளை அறிந்து அதைத் தீர்த்து வைப்பார் என்று நினைக் கிறேன். ஆந்திர ஜில்லாக்களில் ஹாஸ்டல்கள் திறப்பதை நிருத்திவிட்டு தமிழ் நாட்டில் ஹாஸ்டல்களை திறக்கவேண்டும். இங்கிருக்கும் குறைகளை யும் தீர்த்து வைக்கவேண்டும். (At this stage Mr. Speaker resumed the chair.) தெலுங்கு நாட்டில் மட்டும் வசதி செய்துவிட்டு தமிழ் நாட்டில் செய்யாவிட்டால் தமிழ் நாட்டிலிருந்து வந்த M.L.A.க்கள் 30 வருஷமாக ஜனங்களுடன் பழகி வந்தவர்கள்—வெறுப்படைவார்கள். உண்மையாகவே ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் என்று வந்தவர்கள்.

"அடுத்தபடியாக ஹாஸ்டல்களுக்கு கிராண்டு கொடுக்கும் விஷயத்தில் சில குறைகளிருக்கின்றன. ஒரு வருஷம் ஹாஸ்டல் நடத்தி இரண்டாவது வருஷம் நடத்துவதற்கு அவர்களிடம் பணம் இல்லை காசு இல்லை என்று கஷ்டப்படுகிறார்கள். இந்த வருஷம் ஹாஸ்டல் திறக்கப்பட்டிருந்தால் அதற்கு பூரா பணத்தையும் கொடுக்கவேண்டும். எதோ ஒரு இடத்தில் மானேஜ்மெண்டு சரியானபடி இல்லை என்பதற்காக மற்றவர்களுக்கு கொடுப் பதையும் நிறுத்த வேண்டுமா ? மூட்டைபுச்சிக்காக வீட்டை கொளுத்துவதா என்று கேட்கிறேன். தனிப்பட்ட முறையில் நடக்கும் ஹாஸ்டல்களுக்கு எத்தனை பேர்கள் வந்து சேருகிறார்கள். அவர்களுக்கு residential ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. பணத்தை மானேஜ்மெண்டு சரியாக கையாளவில்லை யென்றால்தான் மாணவர்களிடம் பணத்தை நேரடியாகக் கொடுக்கவேண்டும். இன்னும் அதிகமாகச் சொல் வதற்கு அநேகம் இருக்கின்றன. தலைவர் அவர்கள் இன்னும் டயம் கொடுத்தால் இன்னும் சொல்லலாம் என்றிருக்கிறேன்."

MR. SPEAKER :—"உங்களுக்கு கொடுத்த பத்து நிமிஷமும் முடிந்து விட்டது."

*SRI D. DASARATHAN :—"மிஸ்டர் ஸ்பீகர், ஸார், கடந்த ஐந்து வரு ஷங்களில் காங்கிரஸ் சர்க்காரானது ஹரிஜனங்களுக்கு சரிவர நன்மைகளைச் செய்யவில்லையென்ற ஒரு காரணத்திற்காக ஹரிஜனங்கள் காங்கிரஸ் மீதுள்ள கோபத்தைத் தீர்த்துக்கொண்டார்களென்று பல தலைவர்கள் பேசினார்கள். இதை ஆளும் சர்க்கார் உணர்ந்திருக்கிறதா ? அல்லது ஹரிஜனங்கள் ஜனங்களுக்குக் கொடுமை செய்த சர்க்காருக்கு சரியானபடி பாடம் கற்பிக்க வில்லையா ? என்று தெரியவில்லை.

"தற்போது ஹரிஜனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது மிகவும் குறைவாகவே இருக்கிறதென்பதைக் குறித்து பேச விரும்புகிறேன். இப்பொழுது எலக்ட்ரிக் டிபார்ட்மெண்டுக்கும் போலீஸ் பாதுகாப்புக்கும் கொடு கப்பட்டிருக்கும் தொகையை விட மிகவும் குறைவானதாகவே ஹரிஜனங்க ளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 85 லக்ஷம் பேர்களின் முன்னேற்றத்திற் காக ஒதுக்கப்பட்டிருக்கும் 74 லக்ஷம் ரூபாய் போதுமா என்று சிந்திக்கும் போது, மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இந்த 85 லக்ஷம் பேர்க ளின் கண்களைத் துடைப்பதற்கு ஏதோ ஒரு தொகையை ஒதுக்கிவிட்டோம் என்ற எண்ணத்தில் இருக்கிறார்களே தவிர, மற்ற நண்பர்கள் கூறுகிறபடி, அவர்களுக்கு உடனடியாக முன்னேற்றம் ஏற்படுவதற்கு வசதிகள் என் னென்ன செய்திருக்கிறார்களென்று பார்த்தால் ஒன்றுமே செய்யப்பட வில்லை.

"இந்த சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்தில் மிகவும் கவலை எடுத்துக் கொள்ளவில்லையென்பதை, தற்போது ஏற்பட்டிருக்கும் மந்திரிசபை அமைப் பிலிருந்தே தெரிந்துகொள்ள முடியும். இந்த மாகாணத்தில் ஐந்திலொரு

[Sri D. Dasarathan] [23rd July 1952

பங்கு ஜனத்தொகை ஹரிஜனங்களாக இருந்தும், 15 பேர் கொண்ட மந்திரிசபையில், ஒரே ஒரு ஹரிஜன்தான் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றால், இன்று ஹரிஜனங்கள் எவ்வளவு கேவலமான நிலையில் நடத்தப்பட்டிருக்கிறார்களென்பதைத் தெரிந்துகொள்ளமுடியும். கணக்குப்படி பார்த்தால் கட்டாயமாக மூன்று மந்திரிகளாவது ஹரிஜன முன்னேற்றத்திற்கு இருக்கவேண்டும். குறிப்பாக, ஹரிஜன முன்னேற்றத்தை கவனிக்க ஹரிஜன் மந்திரி இருப்பது நலம் என்று எல்லோரும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நானும் அதை ஆமோதிக்கிறேன். ஹரிஜன் மந்திரி இருந்தால் மட்டும் எல்லாம் செய்துவிடுவாரா? என்று பல பேர் கேட்கலாம். அவர் செய்வாரா? அவர் செய்ய மாட்டாரா? என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவிரும்பவில்லை. ஆனால், நாங்கள் அவரை அணுகி, எங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, அவரிடம் எடுத்துச் சொல்லுவோம். குறைகளை நிவர்த்திப்பதற்கு அவர் ஏதாவது செய்தால் பாராட்டுவோம். அவர் செய்யாவிட்டால் அவரை வாயார வேறுவிதமாக வாழ்த்த எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகையால், எங்களுக்கு உரிமைப்படி நடைபெறவேண்டிய இரண்டு அல்லது மூன்று மந்திரி ஸ்தானங்களை கொடுக்கத்தான் வேண்டுமென்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

"ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 74 லக்ஷ ரூபாயில், சரியாக கணக்குப்படி பார்த்தால், உருப்படியாக அவர்களுடைய நலனுக்காகச் செலவிடப்படும் தொகை மிகக் குறைவானதாகத்தான் இருக்கும். பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் பணம் முழுவதும் அவர்களுடைய நலனுக்குச் செலவிடப்படாவிட்டாலும், குறைந்தது 20 லக்ஷம் ரூபாய் கூட அவர்களுடைய நலனுக்குச் செலவாகாமலே ஆபீசர்களுக்கும், வேறு சில வழிகளிலும் பணம் பறிபோகின்றது. ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி இலாகா என்று சொல்லப்படுவது எந்த நிலைமையில் வேலை செய்கிறதென்று பார்த்தால், அவர்கள் ஹரிஜனங்களுக்கு அதிகமாக ஒன்றும் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது. அதிகாரிகளுக்குத்தான் அதிகப் பணம் செலவிடப்படுகின்றது.

"ஜில்லா வெல்பேர் ஆபீசர்கள் சுடுகாடுகளுக்கும், பாதைகளுக்கும், இணறுகளுக்கும், வேறு சில பாடசாலைகளை அமைப்பதற்கும் நிலங்களை ஒதுக்கும் விஷயமாக ஆபீசர்கள் நடந்துகொள்ளும் முறை வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு மனைக்காக மனு போட்டு 5, 6 வருஷங்களாகியும், மனைகளை அடமானம் செய்யும் விஷயமாகயாதொன்றும் பலனில்லாமல் இருக்கிறது. ஆபீசர்கள் அந்தந்த இடங்களில் முகாம் போட்டுக்கொண்டு தங்குவதற்கு செலவு என்ன ஆகிறதோ அதைவிட ஹரிஜன முன்னேற்றத்திற்கு அவர்கள் செலவு செய்வது மிகவும் சொற்பம் என்றுதான் சொல்லவேண்டும்.

"வீடு கட்டும் விஷயமாக பெரும்பாலும் ஹரிஜனங்களுக்கு ஒரு நிபந்தனை விதிக்கப்படுகிறது. அதாவது, மனைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, இரண்டில் ஒரு பங்கு, மூன்றில் ஒரு பங்கு, அல்லது நான்கில் ஒரு பங்கு அவர்கள் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஹரிஜனங்கள் உணவுக்கும் உடைக்கும் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, வீடு கட்டுவதற்கு முன் பணத்திற்கு எங்கே போகமுடியும்? நிலம் வாங்கும்போது ஒரு தொகையைக் கொடுத்தால் நிலம் கொடுக்கப்படும்; பணம் கொடுக்காவிட்டால், நிலம் கிடைக்காது என்று சொன்னால், அவர்களால் என்னசெய்யமுடியும்? பணம் இல்லாத ஒரு குறையினால் அவர்கள் நிலத்தைக் கைவிடவேண்டியிருக்கிறது.

"ஹரிஜனப் பிள்ளைகளின் ஸ்காலர்ஷிப்புக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருஷத்தில், ஜில்லாக்களிலுள்ள வெல்பேர் ஆபீசர்களுக்கு சரியானபடி தகவல் கொடுக்காததால் சரிவர ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லையென்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. சொந்த ஹாஸ்டல் ஏற்படுத்துகின்ற முறையிலும், தனிப்பட்ட முறையிலும் நடத்தப்படும் ஹாஸ்டல்கள், 100-க்கு 99 சரிவர நடக்கவில்லையென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மற்ற ஜாதி இந்துக்களுடன் ஒன்றுகூடி நடத்தும் ஹாஸ்டலாவது சரிவர நடக்கிறதா என்று பார்த்தால், அந்த ஹாஸ்டல்கள் எந்த முறையில் இருக்கிறது என்பது இப்பொழுது அமர்ந்திருக்கும்

23rd July 1952] [Sri D. Dasarathan]

அனேக அங்கத்தினர்களுக்கும் நன்கு தெரியும். மதராசிலுள்ள அனேக கலாசாலைகளில் நம்முடைய ஹரிஜனப் பிள்ளைகளைச் சேர்க்கும் சமயத்தில் அவர்கள் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கும் அளவு எந்த முறையில் இருக்கிறது என்பது தெரிந்த விஷயம். முன் பணமாக ரூ. 150, கட்டினால்தான் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. ரூ. 150 கட்டுவதற்கு ஹரிஜனங்களால் எப்படி முடியும்? ஒரு நாளும் அவர்களால் கட்டமுடியாது. இதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களாவென்றால் அதுவும் இல்லை. இப்படியிருக்கும் சமயத்தில் ஹரிஜனங்களுடைய பிள்ளைகள் எப்படி கல்வித்துறையில் முன்னேற முடியும் என்று நான் கேட்கிறேன்?

"வீடு கட்டிக்கொள்வதற்கு சிறிதளவு தொகையைக் கூட கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். அதனால் நாங்கள் சர்க்கார் காட்டும் ஓர் அளவு சௌகரியத்தையும் அனுபவிக்கமுடியாத நிலையில் இருக்கிறோம். மற்ற ஜாதியினர் வாழும் இடங்களுக்கு ரூரல் வாட்டர் ஸப்ளை ஸ்கீம் முதலியவைகள் டிஸ்ட்ரிக்ட் போர்டால் செய்யப்படுகிறதேயொழிய, சேரிகளில் ரோடுகள் போடவும், இன்னும் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்கும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகிற அளவுக்கு விட்டிருக்கிறார்களென்றால், உண்மையாக ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கான எண்ணமே யாருக்கும் இல்லையென்றுதான் தோன்றுகிறது. மேல் அதிகாரிகள் முதல் கடைசியில் இருக்கும் அதிகாரி வரை ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் அசிரத்தையாகத்தான் இருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் சொல்லவேண்டியிருக்கிறது. குறிப்பாக கணக்குப்பிள்ளைகளிலைல் ஒரு சில கிராமங்களில் ஹரிஜனங்கள் படும் அவஸ்தையை நேரில் சென்று பார்த்தீர்களானால், இம்மாதிரி எங்களை இம்சைக்கு உள்ளாக்கமாட்டீர்களென்று நினைக்கிறேன். 5-10 p.m.

"ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒரு சிலருக்கு ஜில்லா அதிகாரிகள் பதவிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அது போதாதென்று கருதுகிறேன். பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனில் வெகு காலமாக எங்கள் ஜாதியினர் ஒருவர்கூட மெம்பராக நியமிக்கப்படவில்லை. ஸெக்ரடேரியடிலும், ஸெக்ரடரி பதவிகளில் ஹரிஜனங்கள் யாராவது நியமிக்கப்பட்டிருக்கிறார்களாவென்றால், அதுவும் இல்லை. கடைசியாக உள்ள குமாஸ்தா உத்தியோகங்களிலும் ஹரிஜனங்களுக்கு கம்பூனல் ஜி. ஒ. பிரகாரம் ஸ்தானங்கள் அளிக்கப்படுவதில்லை. ஜாதியின் கொடுமையினால் ஹரிஜனங்களுக்குரிய ஸ்தானங்கள் கிடைக்கவில்லையென்று நினைக்கிறேன். பியூன்கள் உத்தியோகமும் எங்களுடைய மக்களுக்கு சரியான முறையில் வழங்கப்படுவதில்லை. எங்கள் ஜாதியினர் பியூன் உத்தியோகம் செய்யப்போனால், தானாகா ஆபீசிலும், மற்ற இடங்களிலும், அங்கு இருக்கும் ஆபீசர்கள் ஹரிஜனங்கள் என்ற காரணத்தினால் எங்களுடைய ஜாதியாராகிய பியூன்களை வைத்துக்கொள்ள மறுக்கின்றார்கள். அவர்களுடைய வசதிக்கும் வீட்டு வேலைகளுக்கும் அவர்கள் உபயோகப்படமாட்டார்கள் என்ற ஒரு காரணத்திற்காக, பியூன் வேலைகள் கூட ஹரிஜனங்களுக்குக் கிடைக்காமல் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, எங்களுக்கு உண்மையிலேயே முன்னேற்றம் உண்டாகவேண்டுமானால், ஜாதி இந்துக்களை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. உடனடியாக நல்லதொரு ஏற்பாட்டை சர்க்கார் செய்யவேண்டும். எல்லா உத்தியோகங்களிலும் ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் ஜாதி விகிதாசாரப்படி உத்தியோகங்கள் தர ஏற்பாடு செய்யவேண்டும்.

"இன்னும் அவசியமாக, ரோடுகள், சுடுகாடு, இணறுகள் இவைகளுக்கு ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்திலிருந்து, வீணுக்காமல், ஜில்லா போர்ட், பஞ்சாயத்து போர்ட் ஸ்தாபனங்களிலிருந்து மேற்படி காரியங்களுக்கு செலவிட அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கனம் சுவாமி சகஜானந்தா அவர்கள் சொல்லியபடி உடனடியாக பெருவாரியான தொகையை நிலங்களில் போட்டு ஹரிஜனங்களை முற்போக்குக்குக் கொண்டுவருவதைவிட, பெருவாரியான தொகைகளைக் கொண்டு 'இண்டஸ்ட்ரீஸ்' ஏற்படுத்தி, அந்தத் தொழிற்சாலைகளில் ஹரிஜனங்களை

[Sri D. Dasarathan] [23rd July 1952

వేలివుక్కు అమర్‌త్తిక్‌కొండాల్, పొరుళాదారత్తిల్ హరిజనంగళై మున్నుక్కు వన్‌దువిడువార్‌గళ్. సర్‌క్కారుక్కుం హరిజనంగళైప్పత్తి వెగువాగ అక్కఱైకొళ్ళవేణ్డియ అవశియముం కుఱైన్‌దు విడుమెన్‌ఱు ఉంగళుక్కుత్ తెరివిత్తుక్‌కొళ్ళుగిన్‌ఱేన్.

"కడైసియాగ, మఱ్ఱ అంగత్తినర్‌గళ్ కూఱియపడి ఎంగళుక్కు పొరుళాదార నిలైమైయిల్ మున్‌నేఱ్ఱత్తై తర సర్‌క్కార్ ఎవ్వళవు ఉదవి సెయ్యవేణ్డుమో అవ్వళవు ఉదవి సెయ్‌దాల్ నలమాగ ఇరుక్కుం. ఎంగళుక్కాగత్ సెలవిడుం 70 లక్షత్తం రూపాయ్ పోదవే పోదాదు. హరిజన మున్‌నేఱ్ఱత్తిఱ్కాగ కుఱైన్‌దదు 2 అల్లదు 3 కోడి రూపాయావదు ఉడనడియాగ ఒదుక్కిత్ తరుమ్ అవర్‌గళ్ మున్‌నుక్కు వరముడియుమెన్‌ఱు తెరివిత్తుక్‌కొండు ఎన్ ఉడైయ పేచ్చై ఇత్తుడన్ ముడిత్తుక్‌కొళ్ళుగిన్‌ఱేన్."

* SRI P. GUNNIAH :—" అధ్యక్ష, శ్రీకాకుళం జిల్లా, టీపురుపల్లి నియోజక వర్గమునుండి 1,50,000 ఓటర్ల తరపున కాంగ్రెసు అభ్యర్థిగా నేను ఎన్నుకోబడినాను. ఇందులో 320 గ్రామములలో ప్రజల సాధక బాధకములు ఈ ప్రభుత్వము వారికి తెలియజేయుచున్నాను. మన రాష్ట్రములో ఎన్ని జిల్లాలకంటే శ్రీకాకుళం జిల్లా వెనుకబడియున్నది. అందులో ఎన్ని తాలూకాలకంటె మెట్టు ప్రాంతమైన టీపురుపల్లి తాలూకా, కరువు కాటకాలకు ఆలవాలమైన రాయలసీమ ప్రాంతాలకన్న వెనుకబడియున్నది. సదరు తాలూకాలో ఇరిగేషన్ పనులు ఇంతవరకూ విమ్మతము జరుగలేదు. సదరు తాలూకాలో భూములు ఇదివరకు జమీందారుల స్వాధీనమై యుండుటవల్ల అప్పటయన్న నీటి వాగులకు ఎట్టి మరమ్మత్తులు లేక పరిపూర్ణ ప్రతి సంవత్సరం పాడుబడియున్నది. కాబట్టి ప్రస్తుతము సదరు చెరువులకు ఎక్కువ డబ్బు శాంక్షన్ చేయించి త్వరలో మరమ్మత్తులు చేయించి అక్కడనున్న రైతులందరికీ యివ్వబడునట్లు ప్రభుత్వమువారు తొలగించగలందులకు కోరుచున్నాను. 1952-53 సంవత్సరపు బడ్జెటులో 64 లక్షల రూపాయలకు మాత్రమే హరిజన సమూహమును గురించి యిచ్చియున్నారు. కాని అది చాలా తక్కువగాబట్టి ఒక కోటి రూపాయలవరకైనా పెంచి యీ వెనుకబడిన జిల్లాలో మా హరిజనులకు విద్యవిషయమై ప్రభుత్వమువారు ప్రతి తాలూకాలో ఒక హాస్టలు నిర్మించి వారికి విద్య సౌకర్యాలను గురించి ప్రభుత్వమువారు తోడ్పడుతారని ఆశించుచున్నాను. హరిజనులకు ప్రతి గ్రామములోను నివేశన స్థలములు గురించి యిప్పటికి 15 సంవత్సరములనుండి దరఖాస్తులు పెట్టి డబ్బులూ కూడా కట్టియున్నాను. ఇంతవరకూ అడబ్బు యివ్వకపోగా స్థలములు కూడా గ్రాంటు చేయలేదు. కాబట్టి గవర్నమెంటువారు యుద్ధసమయములో ఏ మూలస్థితో భూములను స్వాధీనము చేసుకున్నారో హరిజనులకు కావలసిన ఇండ్లకుగాను నివేశన స్థలముల విషయములోనూ అదే మూలు ఉపయోగించి ఇండ్ల స్థలములు త్వరలోనే హరిజనులకు కల్పించి వారి కష్టములన్ని పోగొట్టగలందులకు ప్రభుత్వమువారిని కోరుచున్నాను.

"శ్రీకాకుళం జిల్లా, టీపురుపల్లి, బొబ్బిలి, పెక్కలి, చీపురుపల్లం, పోలాకి తాలూకాలలో వేలాది ఎకరాల బంజరు భూములున్నవి. ఆ భూములు భూమిలేని నిరుపేద హరిజనులకు, వ్యవసాయ కూలీలకు త్వరలోనే పట్టాలు ఇప్పించగలందులకు ప్రభుత్వమువారిని కోరుచున్నాను. ఇప్పటికీ మూడు సంవత్సరములనుండి హరిజనులు, వ్యవసాయ కూలీలు ఎంతో వ్యయప్రయాసలకోర్చి బంజరును సాగులోనికి తీసుకువచ్చి అనుభవించుచున్న ఈ బంజరు భూములన్నీ, పదిగాని, ఇరువదిగాని ఎకరాలకు పైగా ఉన్న పెద్దరైతులు ఆక్రమించుకొన్న ఇతర భూమినిన్నీ వారినుండి తొలగించి హరిజనులకు పట్టాలు యిప్పించగలందులకు ప్రభుత్వమువారిని కోరుచున్నాను. మన రాష్ట్రములో ఉన్న అన్ని

ప్రభుత్వ ఉద్యోగములకన్న తక్కువ ఉద్యోగములగల గ్రామ తలారులజీతములు చాలా తక్కువగాయున్నవి. కాబట్టి నెల ఒకటింటికి 30 రూపాయలవరకైనా పెంచి యీ పేద హరిజనుల యిక్కట్లు తొలగించెదరని మనవిచేయుచున్నాను.

"ఆంధ్రదేశంలో చాకలి, మంగలి తలయారి, వెట్టివారికిచ్చినటువంటి భూములు పెద్ద భూస్వాములు ఆక్రమించుకున్నారు. అట్టి రైతులను తొలగించి ఆయా గ్రామ కాపరులకు ఆ భూములు ఇచ్చేటట్లు చేయగలందులకు శ్రీ రాజగోపాలాచారిని, మా ముఖ్యమంత్రివర్యులను కోరుచున్నాను. 5-20 p.m.

"హైస్కూళ్ల విషయములో గవర్నమెంటు కాలేజీలలో హరిజనులకు ఉచిత విద్యా సౌకర్యాలు కలిగించవలెనని వినయపూర్వకముగా మనవిచేయుచున్నాను.

"ఇంతేకాక విషయమేమిటంటే, ఈ నెల 27 వ తేదినుండి ఈ శాసనసభ సమయం 8-30 నుండి మధ్యాహ్నం 1-30 వరకూ జరుగుతుందని అన్నారు. ఎవరైనా ఆంగ్ల భాషలో మాట్లాడితే ఆ మాట వినిపిస్తూ ఆర్థం కాకుండా ఉన్నది. కాబట్టి ఆంధ్ర M.L.A. లు అందరు ఆంధ్రభాషలోనే మాట్లాడవలసిందని కోరుచున్నాను. వినవనగా, ఈ ఆంధ్ర M.L.A. లు చాలామంది ఎలెక్షను టైములో ఆంధ్ర దేశములో ఉన్న ప్రతి ఓటరుకున్నూ తెలుగులోనే శాసన సభలో మాట్లాడుతామన్నిన్ని, హరిజనులకు తగినటువంటి సదుపాయాలు చేయిస్తామనిన్నీ వాగ్దానములు చేసి వారిదగ్గరనుండి ఓట్లు సంపాదించుకొని ఎన్నుకోబడ్డారు. ఇంతేగాకుండా గ్రామ కాపరులు అయిన వెట్టివాళ్ళు, చాకలి, మంగలి మొదలైనవాళ్లందరు ఎన్నో కష్టనష్టములకోడి యీ M.L.A. లకు ఓట్లు సంపాదించిపెట్టి వీరిని గెలిపించారు. అటువంటి ఈ ఆంధ్ర M.L.A. లు ఈ శాసన సభలో ఇప్పుడు ఆంగ్లభాషలో కొందరు మాట్లాడుతున్నారు. అలాగున చేయుటవల్ల ఈ హరిజనులు మొదలైన ఓటర్లనందరిని మోసముచేసినట్లే అవుతుందని అంటున్నాను. అలా ఆంధ్రభాషలో మాట్లాడకపోవడంవల్ల నేను చాలా విచారించుచున్నాను.

"తదుపరి ఈ సభలో ఇకమీదట ఆయినను స్పీకరుగారు ఆంధ్ర M.L.A. లు తెలుగులో మాట్లాడేటప్పుడు అందరికీ అర్థము అయ్యేటట్లు translate చేయించగలందులకు Speaker గారిని ప్రార్థిస్తూ ఇంతటితో విరమించుకొంటున్నాను."

* SRI V. GOPALA GOUNDER :—" Mr. Speaker, Sir, the subject of Harijan Uplift is very interesting. It is intended to benefit all communities coming under the term 'Harijans' including the Scheduled Classes. Our Constitution provides that a fund may be instituted for the uplift of the Backward and Scheduled communities. Accordingly the Government have instituted a fund. But I find in the Demand that a major portion of the amount is allotted for Harijan Uplift and only a small portion for the uplift of other Backward communities. An amount of Rupees 64 lakhs has been provided under Harijan Uplift for repair of wells, pathways, burial grounds, etc., besides grants to private educational institutions. These are the improvements intended to be carried out. But, from my practical experience I can say with some authority that these improvements are not being actually carried out in the rural areas. I am not speaking of the urban areas, but in the rural areas these improvements stand only in name and they are not being carried out to the satisfaction of major sections of Harijans. If anybody goes to a cheri, he will find

[Sri V. Gopala Gounder] [23rd July 1952

that the condition of these people is very bad. Of course, the money allotted by the Government is somehow being spent by the officers entrusted with this work. My grievance is that simply because we are spending money, we cannot presume that all the improvements that are intended to be carried out by the Government are actually carried out. Sir, the administration of this fund is not properly done by the concerned departments. The money is given to various officers who are drawn from various communities and who have absolutely no sympathy for the Backward communities. An officer of superior caste is appointed to administer this department. This gentleman has absolutely no sympathy for these people and he does everything in his own way and distributes the amount as he likes or as recommended by his own friends. Therefore, I submit that if this department is put under the sole charge of an officer belonging to Backward communities, it will be better managed and administered to the satisfaction of all the people concerned.

" Sir, it is said that the money will be utilized for opening pathways. I would like to ask the Government whether they will be in a position to tell the House how many roads have been repaired and how many pathways have been opened during the last four or five years. Everywhere we find quarrels over these pathways and their usage by Harijans in the rural parts and no official of the Government takes notice of this; the officials are indifferent when matters are represented to them by persons interested in the Harijans; such is the state of affairs now in the rural areas.

" Then, in the case of burial-grounds we find lot of troubles. The poor Harijans are not allowed to carry the corpses along the streets of Caste Hindus and the difficulties that are being undergone by the Harijans are very many. There are perpetual quarrels leading in some cases to serious riots. The Harijans are also not allowed to take processions through the streets of the Caste Hindus. Therefore, Sir, even the simple amenities are not allowed to the Harijans in the villages and the amount allotted for Harijan Uplift is only a waste.

" The question of providing house-sites for Harijans is merely a farce because I know in one case in Gingee taluk some Harijans had to pay Rs. 1,200 for house-sites in 1948 and still they are not assigned any house-site. Representations were made to the Sub-Collector and he simply referred them to the Harijan Welfare Officer, who has not yet disposed of the paper with the result the poor Harijans are put to hardship. They are living in sites that
5-30 p.m. are surrounded on all sides by water. The sanitary conditions are very poor in their neighbourhood. This is how the officers of the Harijan Welfare department do their job. I submit, specific instructions may be issued to all officers, who are entrusted with the management of these things (viz., providing Harijans with house-sites) to do their job in earnest. Let them do their work in a most useful and effective way, so that the Harijans, who are to be benefited under the Harijan Uplift Programme may in reality be benefited. That is why I say that the Government should at

23rd July 1952] [Sri V. Gopala Gounder]

least from now onwards consider the desirability of appointing only members of the Harijan community as officers to administer the Harijan Welfare Department.

" Coming to the Backward Classes, I find that only 10 lakhs of rupees has been allotted for awarding scholarships to them. I do not know how the Government arrived at this meagre sum of Rs. 10 lakhs for providing scholarships for Backward Classes. They could have very well stopped giving scholarships in such a meagre sum. There are a very large number of Backward Class people and Harijans in our State. Even in this House nearly 50 per cent of the hon. Members belong to the Backward and Scheduled Castes. Still we are not in a position to increase the educational concessions for these communities. I am sorry to look at the very low figure provided in the Budget for awarding scholarships to students belonging to these communities. Government ought to have thought twice before arriving at such a low figure. Even now it is not too late. Let the Government provide some additional amount for the awarding of scholarships to Backward Class students, at least when they present the Supplemental Demand.

" I find in the last year's report of the Public Service Commission, that the concessions granted to the Backward Classes were withdrawn from the month of December 1951. In view of the fact that a very large number of people from the Backward communities have come forward and have been selected for public appointments, the age concession hitherto shown to them and the 35 per cent mark limitation have been withdrawn. So far as the Backward Classes are concerned, the argument is put forward that they have to compete with the other candidates of the Forward communities, for the prescribed qualification of 40 per cent of marks. I submit, Mr. Speaker, that we have not advanced to such an extent. Government should wait and see whether we have really come up to the level of the Forward Classes. They should not do things in a hurried manner. The Harijans should be properly taken care of. I do not say that the Government have not done anything towards the betterment of the Harijans. No doubt they have done something. I am thankful to them for what all they have done. It is due to their benevolent attitude towards the Harijans and other Backward communities that we find so many hon. Members belonging to those communities adorning this House. But that is not enough. The Government should proceed forthwith to improve the social and economic conditions of the poor Harijans both in the rural and urban areas, who are suffering very much at the present juncture. More scholarships should be provided for the Harijans and Backward Classes so that these poor boys could prosecute their studies further. Even now it is not too late."

* **Sri V. MUTHU** :—" கனம் சபா நாயகர் அவர்களே ! சபை முன்பு கொண்டுவரப்பட்டுள்ள ஹரிஜன மானியத்தைப் ஆமோதித்து, சில விஷயங்களைச் சொல்லப்பிரியப்படுகிறேன். இந்த மானியத்தைப் பற்றி விவாதிப்பதற்கு மற்ற எல்லா மானியங்களுக்கும் ஒதுக்கியதை விட மிக அதிகமான நேரம் (8 மணி) ஒதுக்கியிருப்பதற்காக தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" இந்த மாகாணத்தில் இதற்கு முன்பு இருந்த சர்க்காரும் தற்போதைய சர்க்காரும் ஹரிஜனங்களுடைய அபிவிருத்தி விஷயத்திற்கு ஒரு முக்கியத் துவம் கொடுத்து, அக்கரையுடன் காரியங்களைச் செய்து வருவதைக் கண்டு நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாகாணத் தில் நம் மதிப்பிற்குரிய கனம் ராஜாஜி அவர்கள் 1937-இலே முதன் மந்திரி யாக இருந்த காலத்தில் தான் ஹரிஜன முன்னேற்றத்திற்கு மிகவும் தடை யாக இருந்த ஆலயப்பிரவேச சட்டமும், சமூகத் தடை நீக்கச் சட்டமும், தீண்டாமை விலக்குச் சட்டமும் கொண்டு வரப்பட்டன. இந்தச் சட்டங்கள் மூலமாகத் தான் ஒன்றும் தெரியாமல் குக்கிராமங்களில் இருந்த ஹரிஜன மக்கள் எல்லோரும் ஒருவாறு விழிப்படைந்தார்கள். தற்போது தம்முடைய கோரிக்கைகளையும், உரிமைகளையும் போராடியாவது பெறக்கூடிய திறமையை ஹரிஜன சமூகத்திலுள்ள படித்த மாணவர்களும், மற்றவர்களும் அடையும் படி செய்தது அந்தச் சட்டங்கள் தான். அப்படியிருந்தும் கூட தற்போது சபையில் பேசிய பல ஹரிஜன அங்கத்தினர்கள் சர்க்கார் தரப்பிலிருக்கிற குறைபாடுகளை மாத்திரம் எடுத்துச் சொல்லி சர்க்காரின் போக்கை கண்டித்தது நலலதல்ல. எல்லோரும் கட்சி மனப்பான்மை அரசியல் பொருமைகள், சர்க்கார் கட்சியிடம் காடப்படும் துவேஷ மனப்பான்மை இல்லாமல் உண்மை யாக அவரவர்களுடைய ஹிருதயத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு சொன்னால் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக பலபல காரியங்களை இந்தச் சர்க்கார் செய்திருக்கிறதென்பதை எல்லோரும் நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள். சென்ற இருபது வருஷ காலமாக நான் சுத்த பட்டிக் காட்டில் படியாத ஏழை ஹரிஜனங்கள் மத்தியிலிருந்து கொண்டு ஹரிஜனப் பணியாற்றி வருகிறேன். நான் இந்தச் சபையிலுள்ள ஹரிஜன அங்கத் தினர்களைக் கேட்கிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டங்களையெல்லாம் எவ்வளவு தூரம் நம் சமூகத் தின் நன்மையைக் கருதி நாம் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம்? சர்க்காரால் பலவிதமான சௌகரியங்கள் நமக்குச் செய்து கொடுக்கப் பட்டிருந்தும் அதை நம் ஜாதியார்கள் முழுவதும் பயன்படுத்திக் கொள்ள வில்லை யென்பது தான் உண்மை. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பள்ளிக்கூடத்தில் கட்டாயமாக அதிக ஹரிஜனப்பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கிடையாது என்று சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சேரி களுக்குச் சென்று பிள்ளைகளைப் பள்ளிக்கு கட்டாயம் அனுப்பவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். நம் சமூகத்தைச் சேர்ந்த தாய்மார் களும், தந்தைமார்களும் அந்த ஆசிரியர்களுடன் ஒத்துழைத்துப் பிள்ளைகளை பள்ளிக்குப் அனுப்பி வைக்கிறார்களா? அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்து நாமே குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டாமா? இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை, என்று சர்க்காரிடம் எப்பொழுதும் குறை சொல்லிக் கொண்டே இருக்காமல் அவர்கள் நம் சமூகத்தின்பால் அன்பு வைத்து செய்யக் கூடிய நன்மைகளைப் பூராவாக உபயோகப்படுத்திக் கொள்வது நம் கடமை இல்லையா? அந்தத் துறையில் நம் சமூகத்தவர் உழைக்கவேண்டியது அவசியமில்லையா? இந்த முறையில் பார்த்தால் நாம் மிகவும் அஜாக்கிரதையாக இருக்கிறோம். அலக்ஷியமாக இருக்கிறோம் என்று தான் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். கனம் மெம்பர் ஸ்ரீமான் ஷண்முகம் பிள்ளையவர்கள் மதுவிலக்கு மானியத்தின் மீது பேசும்பொழுது சொன்னார்கள், ஹரிஜனங்கள் படியாததால் தான் இப்பொழுது சொம்பப் பேர் குடிக்கிறார்கள் என்றும். கள்ளுக்கடையைத் கொண்டு வந்தால் சர்க்காருக்கு நிறையப் பணம் வரும். அது பூராவையும் ஹரிஜனங்களின் கல்விக்காகச் செலவிடலாம். ஹரிஜனங்களைப் படிக்கச் செய்து விட்டால் அவர்களே குடியை மறந்து விடுவார்கள், என்பதாகவும் சொன் னார்கள். உண்மையில் அவர் ஒரு சேரியிலே குடியிருந்திருப்பாரேயானால், அல்லது ஒரு சேரியின் அருகிலேயாவது குடியிருந்திருப்பாரேயானால் இம் மாதிரி சொல்லியிருக்கமாட்டார்கள். முன்பு சேரியிலே நடந்து கொண் டிருந்தது என்ன? உங்கள் பிள்ளையை பள்ளிக்கு அனுப்புங்கள் என்று பிள்ளையைக் கூப்பிடுவதற்காக ஆசிரியர்கள் சேரிக்குப் போவார்கள். அந்தச் சேரியிலே தகப்பன் தான் நிறைய கள்ளைக் குடித்திருப்பதோடு அல்லாமல் ஒரு இளஸ் கள்ளை மகன் வாயிலேயும் ஊற்றிக் கொண்டிருப்பான்.

பிள்ளையை பள்ளிக்கு அனுப்பு என்றால் குடி போதையில் இருக்கும் அவனு இதற்கு சம்மதிப்பான்? போதை வெறியிலே இருக்கும் அந்தப் பிள்ளைக்கு படிப்பு வருமா? வரவே வராது. ஆகையால் கள்ளும் கல்வியும் கலந்தால் சமூகம் வளராது. நண்பர்கள் சொன்னமாதிரி சேரிக்குப் பக்கத் தில் கள்ளுக்கடையை வைத்துவிட்டு, அந்தக் கள்ளிலிருந்து வரும் வரு மானத்தை ஹரிஜனபிள்ளையின் கல்விக்காக செலவிடு என்று சொன்னால் அது ஹரிஜன மக்கள் உண்மையில் முன்னேறவேண்டுமென்ற எண்ணத் தோடு சொல்லப்பட்ட யோசனையா? அல்லது ஹரிஜன மக்கள் விழிப் படையாது, என்றென்றைக்கும் அடிமைப்பட்டே வாழ்ந்து வரவேண்டு மென்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்லும் சூழ்ச்சிகர மான யோசனையா? 'கள்ளுக்கடையை ஒழித்ததால் சர்க்காருக்கு வருமானம் குறைந்துவிட்டது. அதனால் பல காரியங்களை ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டுமென்றாலும் சர்க்காரிடத்தில் பணமில்லை. அனேகச் சலுகைகளைச் செய்ய முடியவில்லை,' என்றும் பலர் சொன்னார்கள். கள்ளுக்கடை ஒழிப்பால் ஏற்படும் ஏராளமான நஷ்டத்தைப் போக்கத் தானே வருமான வரி போட்டோம். அதனால் இன்றைக்கு ஏராளமாக வருமானம் வர வில்லையா? அந்த வருமானப் பணத்தை எடுத்து சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்திற்குச் செலவிட முடியாதா? செலவிட்டுக் கொண்டும் வர வில்லையா? மேலும் எதற்காக கள்ளுக்கடையை கொண்டுவரவேண்டு மென்று சொல்லுகிறார்கள். மது ஒழிப்பால் ஹரிஜன முன்னேற்றம் அதிக மாக ஏற்பட்டு வருகிறதே, அதை ஒழித்துவிடவேண்டுமென்ற எண்ணத் தோடா இந்த யோசனையைச் சொல்லுகிறார்கள்? ஒன்று உறுதி. இன்று கள்ளுக்கடை ஒழிந்ததால் தான் எங்கள் சமூக மக்கள் விழிப்படைந்திருக் கிறார்கள். சுய உணர்ச்சியை அடைந்திருக்கிறார்கள். தன்மானம் உடைய வர்களாக மாறி இருக்கிறார்கள். சேரியிலே கள்ளுக்கடையை வைத்து விட்டு பக்கத்திலுள்ள கல்விச்சாலைக்குப் போ என்று சொல்வது அவர்களை குழியில் தள்ளுவதைப் போலத்தான் ஆகும். அவர்கள் யாரும் படிக்கப் போக மாட்டார்கள். இதைக்கண்டும் கூட எங்கள் சமூகத்தின் நலனுக்கு வாதாடுப வர்களைப் போல சிலர் பேசியிருப்பது எங்களை மடையர்களாக்கி, முட்டாள் களாக்கி என்றைக்கும் அடிமைகளாகவே வைத்திருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லப்பட்ட சூழ்ச்சியான எண்ணமேயாகும் என்பதை நான் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது". (ஸ்ரீ டி. ஷண்முகம் குறுக்கே எழுந்து பேச முயன்றார்.)

Mr. SPEAKER :—" பேசுகிறவர் உட்கார்ந்து இடம் கொடுத்தால் தான் நீங்கள் பேசலாம். அவர் உட்காரவில்லை". 'கனம் ஸ்ரீ வி. முத்து உட் கார்ந்தார்.'

Sri T. SHANMUGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே! என் பெயரைக் குறிப்பிட்டு கனம் அங்கத்தினர் பேசியதினால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கள் இப்பொழுது ஒழிக்கப்பட்டிருந்தாலும் கூட அவர்கள் இன்று குடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். திருட்டுத்தனமாக அவர்கள் இன்று சாராயத்தையும், மற்ற பல போதைப் பொருள்களையும் குடிப்பதினால் ஏராளமான பேர்கள் இறந்து கொண்டும் இருக்கிறார்கள். அதனால் தான் நான் சொன்னேன். இப்படி அவர்கள் கண்டாகண்ட போதைப் பொருளைத் தின்றுவிட்டு இறந்து கொண்டிருக்கிறார்களே, கள்ளைக் கொண்டு வந்துவிட்டாலும் பரவாயில்லையென்பதாகத் தான் சொன்னேன். அதனால் அவர்கள் இப்பொழுது குடிக்கிறதேயில்லை. புதியதாக கள்ளைக் கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுக்க வெண்டுமென்று சொல்லவில்லை யென்பதாக நான் தாழ்மையாகச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்". 5-40 p.m.

* **Sri V. MUTHU** :—" கனம் தலைவர் அவர்களே! நண்பர் ஸ்ரீ டி. ஷண்முகம் பிள்ளையவர்களுக்கு இங்கே பதில் சொல்ல நான் விரும்ப வில்லை. அவரிடம் அதைப் பற்றித் தனிமையாக பேசிக் கொள்ளுகிறேன். தலைவர் அவர்களே! திருட்டுக் கள் சாராயம் காச்சும் தொழில் குடிசைத் தொழிலாகிவிட்டது என்றும் அதனால் கள்ளைக் கொண்டு வந்தால் தேவலை யென்றும் சொல்லப்பட்டது. தயவு செய்து கள்ளுக்கடைக் குடிசைத் தொழில் சேரிகளுக்கு வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடை

யிருந்த போது ஹரிஜனங்கள் வேலை செய்த சொற்பப் பணத்தையும் கள்ளுக்கடையில் போட்டு குடித்து, போதை வெறியோடு வீட்டிலே வந்தால் கஞ்சி வைக்கவில்லையென்று மனைவியையும் மக்களையும் துடைப்பக்கட்டையாலும் முறத்தாலும் மண்டை மயிர் கழிய போட்டடித்ததும் போதும். மண்டை மயிர் இன்னும் கூட முளைக்கவில்லை. அதற்குள் ஹரிஜனங்களுக்கு கல்விக்காகவென்று சொல்லி மறுபடியும் கள்ளுக்கடைகளை வைத்து ஹரிஜனங்களைக் குடிக்கவிட்டு வெறியர்களாகவும், மடையர்களாகவும் ஆக்கி விடவேண்டாம்.

"ஸ்வாமி ஸகஜானந்தா அவர்களும் சொன்னார், 'கனம் ராஜாஜி அவர்கள் கூட ஹரிஜனங்கள் மேல் கோபித்துக் கொண்டுதான் இம்மாதிரி ஹரிஜனங்களுக்கு அதிகமான சலுகை கொடுக்கத் தவறிவிட்டார்கள்' என்று. உண்மையில் நான் கேட்கிறேன். கனம் ராஜாஜி அவர்கள் ஹரிஜனங்களிடம் கோபமாக இருந்திருந்தால் சென்னை மாகாண ஹரிஜனராகிய தாங்கள் இந்த சட்டசபை சபாநாயகராக அமர்ந்திருக்க முடியுமா? தங்களைக் காலை வாறிவிட முயற்சித்தது யார்? எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதை சாமியவர்கள் நினைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக பத்து வருஷ திட்டம் போட்டிருக்கிறோம். இதை நிறைவேற்றுவதற்கு நல்ல யோசனை கூறுமல் ஹரிஜன இலாகாவுக்கு ஒரு ஹரிஜன மந்திரியைப் போடாமல் ஒரு பிராமண மந்திரியைப் நியமித்திருப்பதைப் பற்றிச் சில அங்கத்தினர்கள் குறை கூறினார்கள். நான் கேட்கிறேன். கடந்த கால இரண்டு வருட ஆட்சியில் ஹரிஜன மந்திரி யார்? ஸ்ரீ கூர்மையா முன்பு இருந்தார்களே? அவர்கள் யார் பிராமணரா? ஸ்ரீ பரமேஸ்வரன் மந்திரியாக இருந்தாரே? அவர்கள் யார்? நாயக்கரா? அவர்களால் ஏன் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயையும் செலவழிக்க முடியவில்லை. அவர்களுக்கு சக்தியில்லையா? அவர்களுக்குச் செலவழிக்கத் தெரியவில்லையென்ற அர்த்தம்? இல்லை. நிர்வாகத்தில் ஏதோ சங்கடம் இருந்து கொண்டு தான் இருக்கிறதென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும், தவிர இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒருசமயம் நானும் ஸ்ரீ கக்கன் அவர்களும் பேசிக் கொண்டபொழுது ஹரிஜன இலாகாவை ஒரு ஹரிஜனருக்குத் தருவதைவிட வேறு எந்த இலாகாவைக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று யோசித்தோம். அப்பொழுது ஸ்ரீ கக்கன் சொன்னார்கள், ஒரு ஹரிஜனர் ஹரிஜன இலாகாவுக்கு மந்திரியாக இருப்பதை விட கல்வி இலாகாவுக்கோ, ரெவின்யூ இலாகவுக்கோ மந்திரியாக இருந்தால் ரொம்பவும் சௌகரியமாக ஹரிஜனங்களுக்கு அதிக சௌகரியங்களைச் செய்து தரமுடியும் என்று. இப்பொழுது கல்வியும் ஹரிஜன இலாகாவும் ஒரே மந்திரியிடம் இருப்பதால் ரொம்பவும் சௌகர்யமாகப் போய் விட்டது. ஆகவே கல்வி விஷயத்தில் அதிகமான சலுகையைக் கொடுக்க கனம் கல்வி மந்திரி அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் மந்திரி அவர்களும் அப்படியே செய்வார்கள் என்று நம்புகிறேன்.

"அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் அதாவது மதுரை ஜில்லா உசிலம்பட்டி பிராந்தியத்தில் வாழும் ஹரிஜன விவசாய கூலிகளெல்லாம் அதிகுள்ள பாக்வேர்டு ஜாதியார்களை அண்டிப் பிழைக்கிறார்கள். இவ்விரண்டு சமூக விவசாயிகளுக்காக அந்த பிராந்தியத்தில் எலக்ட்ரிஸிடி டெவலப்மெண்டு சிஸ்டம் முதலிய திட்டங்களை நடத்தி அதன் மூலம் ஏழை ஹரிஜன விவசாயிகள் முன்னேறச் செய்ய வேணுமாய் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI P. SYAMASUNDARA RAO :—"అధ్యక్షా, హరిజనులు ఎక్కువగా వ్యవసాయ కూలీలుగానీ, కౌలుదారులుగానీ ఉంటూ వున్నారు. వారికి వ్యవసాయ కూలీసంఘాలు, కౌలుదార్ల సంఘాలు ఉన్నాయి. వ్యవసాయకూలీలకు కనీస కూలీరేటు, ఒక రూపాయికి 0-1-6 లాభాన తక్కువకాకుండా ఉండాలని చెప్పి, ఆ రకంగా ప్రభుత్వం ఒక కూలిరేటు చట్టం చేయాలని చెప్పి వ్యవసాయకూలీలు కోరుతున్నారు. ఇదేరకంగా కౌలుదార్లకు కూడా ఒక కనీసం కౌలురేటు అనగా

ఐదింట మూడుపాళ్లు కౌలుదారుకు మిగతా రెండుపాళ్లు ఈనాందారుకు ఇచ్చేలా నేటట్లుగా ఉండాలి అని, ఈ కౌలుదార్ల సంఘాలు ప్రభుత్వాన్ని వత్తిడిచేస్తున్నాయి. ఇదంతా గవర్నమెంటు హరిజనులకు, హరిజనులకంటె వెనుకబడినటువంటి తరగతివాళ్లకు చేయవలసి వుంది. అయితే కౌలుదార్లుగా, వ్యవసాయకూలీలుగా వీరు చేస్తున్న ఆందోళనను ఒక చట్టరూపముగా విరమింపుచేయలేదు. అది చేయవలసిందని ప్రభుత్వాన్ని నేను గట్టిగా అడుగుతున్నాను. అలాగే హరిజనులకు కనీస కూలి కోర్కె కౌలుదార్లుగా ఉన్నటువంటివారికి కౌలుకంట్రోలును గూర్చి చేసిన ఆందోళనను గూర్చియే కుమారస్వామి రాజా ప్రభుత్వం నర్సాపురం తాలూకాలోని చించినాడి గ్రామంలో ఇద్దరు హరిజనులను పొట్టనపెట్టుకుంది. ఈరకంగా ఈ హరిజనులను కనీసపుకూలీలకోసం పోరాడినందుకే పొట్ట బెట్టుకోవటం జరిగింది ఈ కాంగ్రెస్ ప్రభుత్వ మాయంలో. ఆదే కాంగ్రెస్ ఈ వేళ మరల గద్దెక్కి కూర్చుంది. ఆ ప్రభుత్వంలో శాసనసభ్యుడుగా ఉన్నటువంటిన్నీ, ఆ హరిజనుల మరణమునకు బాధ్యత వహించినటువంటిన్నీ ఆల్లూరు సత్యంగారే, తన స్వంత గ్రామంలోని హరిజనులకు కనీసపుకూలి ఒక రూపాయికి తక్కువ లేకుండా వుండాలని ఆడగగా శ్రీ ఆల్లూరు సత్యంగారు వారితరపున వున్నవారు. ఈ హరిజను లందరు కమ్యూనిష్టులని చెప్పి వాళ్లమీద ఆక్రమనిందలు మోపి చాలా హింసలు పెట్టి, అనేకమైన నిర్బంధాలు పెట్టారు. ఈ రూపాయి డబ్బుల కూలి ఆడిగినందుకే ఒకరాజు పుణ్యంకోసం హరిజనులకు త్రవ్వించిన మంచినీటిబావిని పూడ్పించడానికోరకు ఉయ్యాడు ఆ హరిజనవాడకు చాలాదూరంలో వున్న వెర్వునుండి నీరు తెచ్చుకోకుండ చేయడంకోసం వారు నడిచేరోడ్లు త్రవ్వించి ముళ్లకంపలు వేయించాడు. తర్వాత ఈ శ్రీ రాజాజిగారి ప్రభుత్వం వచ్చిన తరువాతనే సకినేటిపల్లి అనే గ్రామంలో కాంగ్రెస్ వాది, పెద్ద భూస్వామి అయినటువంటి శ్రీ లింగమూర్తి గారిని హరిజనులు కనీసపుకూలి కోరగా, వారు తమ సిబ్బందిని, హాలీను సిబ్బందిని తీసుకొని వచ్చి, తుపాకులతోను, బల్లెములతోను వచ్చి యీ హరిజనులను బెదిరించారు. ఈ వ్యవహారమంతా రాజాజీప్రభుత్వం వచ్చిన తరువాతనే జరిగింది. ఒక్కవిషయం తప్పకుండా చెప్పాల్సి వుంది. ఆదేమంటే అక్కడి హరిజనులు కోరినకూలి ఈ లింగమూర్తి రాజు తప్ప తక్కినవారు అంగీకరించి ఇచ్చారుకూడా, యిది భూస్వాములకు ధనికవర్గానికి ప్రాతినిధ్యం వహించే ప్రభుత్వం కాబట్టనే భూస్వాముల పక్షాన్ని వుంటూ వారికి మద్దతు నిస్తుంది. అందువలన హరిజనులకు ఎక్కడ జీవించుటకు ఆధారము లేకుండా వున్నది.

"మా తాలూకాలో వేలాది ఎకరాలు బంజరుభూమి వున్నవి. ఈ భూములు మాజీసైనికులైన హరిజనులు ఎంతో కాలంగా సాగుచేసుకుంటామని ఆందోళనచేస్తే ప్రభుత్వంవారు బంజరుభూములు హరిజనులకు యిస్తామని చెప్పిన కారణంచేత వాన ఆనక, ఎండనక ఎంతో కష్టపడి సాగుకులే ప్రయత్నించగా వారి కేలాంటి సౌకర్యాలు కలిగించలేదు. ఇది గాకుండా యీ ప్రాంతములలోనే పెద్ద భూస్వాములైన నడింపల్లి భద్రరాజుగారికి 80 ఎకరములున్నవి, తాయి సత్యనారాయణగారికి రెండు వందల ఎకరములున్నవి, యింకొకరు పొన్నపల్లి బ్రహ్మణ్యంకు 80 ఎకరాలున్నవి సోసైటీలపేరట యిచ్చారు. వీరంతా పెద్ద పెద్ద భూస్వాములు. ఇది కూడా రాజాజీప్రభుత్వం గద్దెక్కిన తరువాత జరిగినదే! యీ వ్యవహారములన్నియునూ యీ కాంగ్రెసు ప్రభుత్వానికి తెలియకుండా ఉండవనుకుంటాను. ఇదంతా ప్రభుత్వానికి తెలిసియే తన్ను గానట్టి వూరుకుంటుందనేది అందరికి తెలిసినవిషయమే.

"మరొకవిషయము చెప్పదలచుకొన్నాను. నర్సాపురంలో బోనుమహ్యోడ్డు 5-వ ప్రక్కన జిల్లాబోర్డు స్వాధీనంలో ఒక భూ స్థలమున్నది. అది ఫలితములేకుండా

[Sri P. Syamasundara Rao] [23rd July 1952

ఖాళీగా ఉన్నది. ఈ భూమిని కాంగ్రెసువాదులమని చెప్పుకొనే K. Subbaraju, బంధారు రాజుగార్లకు యిచ్చారు. కాని పేదవారికి యిళ్ల కట్టుటకు యివ్వలేదు. ఇది ప్రభుత్వదృష్టికి లేగా ఆది జిల్లాబోర్డుకు సంబంధించిన విషయం అని తప్పించుకున్నారు. అయితే స్థానిక సంస్థలకు ప్రభుత్వానికి సంబంధములేదా? అయితే యీ విషయములో నేను ప్రభుత్వాన్ని సూటిగా ఒకటి ప్రశ్నిస్తున్నాను. కాండ్రదనగర్ మునిసిపాలిటీని రద్దుచేసేందుకు ప్రభుత్వానికి అధికారం ఎక్కడనుంచి వచ్చింది? ఆ విషయంలో కలగజేసుకోవడానికి సంబంధమేలా కుదిరింది? అది కేంద్ర ప్రభుత్వమే చేసిఉండవచ్చు. ఎందుచేత కలగజేసుకుందంటే ఆక్కడ పబ్లిసంస్థగా ఆక్కడి మునిసిపాలిటి రూపొందినది. ఈ విధంగా పేదప్రజల సమస్యలకు, ధనికుల మధ్య వ్యత్యాసం చూపుతూ, తమ కవసరమైనచోట కలుగచేసుకుంటూ, కానిచోట తప్పించుకుంటుంది ప్రభుత్వం. ఎక్కడైనా బంజరుభూము లుంటే. అవి యీ హరిజనులు సాగు చేసుకుంటూ ఉంటే అవి లాగుకొనడము, ఎక్కడైనా భూస్థలము లుంటే, ఆక్కడ యిళ్లు వేగకుంటే, ఆక్కడనుంచి లేవగొట్టడము జరుగుచున్నది. ఇటువంటి అక్రమాలు అన్ని యసూ యీ కాంగ్రెసు ప్రభుత్వమువారి హయాములోనే జరుగుచున్నవని మనవిచేస్తున్నాను. ప్రభుత్వంవారు, రాజకీయ బాధితుడనని చెప్పుకుంటు తిరుగుచున్న ఫీయవరం తాలూకా వీరవాసరంలోని ఒకరికిష్ణమూరు అయిదు ఎకరాల భూమిని కాంక్షను చేయించారు. వీరు ఎన్నడునూ కాంగ్రెసులోనే తలయెత్తి పనిచేయలేదు. కాంగ్రెసు గద్దెక్కడం చూచిన తరువాతనే వీరు ఖద్దరువేయుట ఆరంభించారు ఇట్టివారు నిజంగా కాంగ్రెసులో పనిచేశారా, లేదా, యీ భూములు యివ్వటానికి విర్వచించిన రూల్సు క్రిందకు వస్తారా, రారా అనే విచారణ, విజ్ఞాపనలేకుండా భూమిని యిచ్చారు. వీరు స్వయముగా ప్రభుత్వంలో పలుకుబడిని సంపాదించుకొని direct గా అర్జీలు సంపాదించుకొన్నారు. ఈ పాలమును ఆక్రమించుకున్నారు. ఆ పాలము ఉప్పర్లు సాగుచేసుకుంటున్నది. ఈ భూమి అతనికి కట్టబెట్టడంలో ఆక్కడి పోలీసుఆఫీసర్ల పాత్ర కూడ వుంది. ఇంతేకాకుండా కైకలూరు తాలూకాలో కలిదిండి ఎస్టేక్కనే లంక అనే గ్రామములకు చెందిన బంజరుభూమిని మాజీసైనికులయిన హరిజనులు సాగుచేసుకొంటూ వుంటే కమ్యూనిష్టులు అనే నెపంతో ఆ భూమి లాక్కుకుని వాళ్లపై కేసులు బనాయించారు. అవన్నీ రుజువుకాకపోగా వాళ్లు నిర్దోషులని కోర్టు తీర్పుయిచ్చిన తదుపరి కూడా వాళ్లభూములు వాళ్లకివ్వకపోవడానికి కారణం ఏమిటని ప్రభుత్వాన్ని అడుగుతున్నాను. ఇది కాకుండా గత యుద్ధములో పనిచేసిన ex-military వాళ్ళకి భూములు యిస్తానున్నారు. ఈ మిలిటరివారు వాళ్ల సంసారములను, బిడ్డలను, తలకొండాదు ఆస్తి విడిచిపెట్టి వేలసైన్యు సముద్రములో ప్రయాణముచేసి, గుండుదెబ్బలకు గురి అయి నానాకష్టాలు పడి యిళ్లకు తిరుగువున్నారు. ఇట్టివారికి భూములు యిస్తామని చెప్పిన కారణముచేతనే వీరు యీ యుద్ధమునకు వెళ్లియున్నారు. ఇట్టివారికి కూడా భూములు యివ్వనేలేదు. ఈ జిల్లాలలో ఉన్న రెండు మూడువందల ఎకరాలభూమి యీ ex-military వాళ్లు సాగుచేయుటానకు స్టాసైటీలు పెట్టి సాగుచేసుకోమని ఆ సొసైటీలు దోపిడిగాళ్ల చేతి కిప్పగించి, తిరిగి ఆదేమైందీ ప్రభుత్వం ఆలోచించ లేదు. వాళ్లు ఎంతో ఆప్పులుచేసి ఖర్చుపెట్టిన డబ్బుమట్టుకు దండగ అయింది. అప్పులు తీర్చలేని స్థితిలో ఉన్నారు వారిప్పుడు. గనుక యీ పైన చెప్పిన విషయములు అన్నియు గవర్నమెంటువారు పూర్తిగా విచారింపగలందులకు ఒక enquiry committee ని వేయించి యీ అన్యాయాలన్నియు పరిశీలించి, న్యాయము చేసూ యీ హరిజనుల జీవనోపాధిని కాపాడవలెనని కోరుతున్నాను.

*శ్రీ MUTHUKUMARASWAMI:—"ఘనం మద్దిపట్లగారు అధ్యక్షస్థానమును అలంకరించి యుండగా ఈ సభలో ఈ ముఖ్యమైన విషయమును చర్చించుటకు అవకాశము కలిగించినందులకు ముందుగా నేను మీకు కృతజ్ఞతలు తెలుపుకొనుచున్నాను. ఈ విషయమును చర్చించుటకు ముందు ఈ విషయమును గురించి ఇంతకు పూర్వము ఈ సభలో ఎవరెవరు ఏమేమి చెప్పినారో వారందరికి నేను ధన్యవాదములు తెలుపుకొనుచున్నాను.

நடக்கும் கொடுமைகளை பொறுக்கமுடியவில்லை. எல்லோரும் புழுங்கிச் சொல்லுகிறார்கள். எத்தனையோபேர்கள் அடிபட்டு ஓடினார்கள். அப்படி ஓடியவர்களில் நானும் ஒருவன். நான் பயந்து காரைக்காலில் போய் ஒளிந்து கொண்டேன். விசாரணை பண்ணிப்பாருங்கள் தெரியவரும். எந்த இடத்திலாவது யாராவது கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களாவென்று பார்க்கவேண்டும். அப்படி யாராவது ஹரிஜன் கம்யூனிஸ்டுகள் இருந்தால் (சுவாமி சகஜானந்தம் அவர்கள்தான் தற்கொலை செய்து கொள்ளுகிறேன் என்று சொன்னாரே.) நான் காதை அறுத்துக்கொள்ளுகிறேன். அங்கிருக்கும் ஹரிஜனங்கள் எல்லாரும் கம்யூனிஸ்டுகள் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும் என்பதை நான் சர்க்காருக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

6 p.m. "போலீஸால் அடிப்பட்ட ஊர்களின் பெயர்களை என்னால் சொல்ல முடியும். இதோ சொல்லுகிறேன்: நன்னிலம் தாலூகாவில் பூங்காவூர், நெடுஞ்சேரி, வடக்குத்தெருவு, தெற்குத்தெருவு, பொன்னாரை, திருமியெங்சூர், வடக்குத்தெரு, தெற்குத்தெரு, பண்டாரவாடை, சித்தாம்பூர், கோவிந்தசேரி, முதலிய இடங்களில் அடிப்பட்டவர்கள் பேரளம் லோகல் பண்டு ஆஸ்பத்திரியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்றும் மேல பூதனூர், கொந்தை, விஷ்ணுபுரம், செறுதலைக்குடி, கீறனூர், முதலிய ஊர்களில் போலீசார் அடித்தார்கள், சித்தாம்பூரில் சிங்காரத்தின் மனைவியை பட்டப்பகலில் அநியாயம் செய்தார்கள், சொல்லமுடியாது. நான் கண்ணால் நேராகப் பார்த்தேன். அதைப்பற்றி நினைக்கும் போது மிக மிக வருத்தப் படுகிறேன். இந்த மாதிரி எங்கும் நடக்காது. மற்றும் சீயாழி தாலூகாவில் பனங்காட்டாங்குடி பக்கிரிசாமியையும் அவருடைய மருமகனையும் கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். அவர் ஒரு ஜில்லா போர்டு மெம்பர். அப்படிப் பட்டவரையும் அவருடைய மருமகனையும் அடித்து ஹிம்சை செய்திருக்கிறார்கள். நான் சொன்ன இடங்களிலெல்லாம் சென்று விசாரித்துப்பாருங்கள். அதற்கு ஒரு விசாரணைக் கமிட்டி அமைக்கவேண்டும். இதனால் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஹரிஜனங்களெல்லாம் இன்றைக்கு கொதிப்படைந்திருக்கிறார்கள். சர்க்காரிடம் இன்னும் ஹரிஜனங்களுக்கு எற்படும் பலவிதமான குறைபாடுகளை சொல்லவேண்டியதாக இருக்கிறது. ஒரு விசாரணைக் கமிட்டிபோட்டு இதை விசாரிக்கவேண்டும். நான் ரொம்பவும் கஷ்டப்பட்டு இதைச் சொல்லுகிறேன்.

"அவ்விதம் ஒரு விசாரணைக் கமிட்டி போடுவதாக இருந்தால் அதில் மதிப்பிற்குறிய கனம் சகஜானந்தம் அவர்களையும், பெண்களின் சார்பில் ஸ்ரீமதி சௌந்தரம் இராமச்சந்திரம் அவர்களையும் அந்தக்கமிட்டியில் போட வேண்டுமென்ற யோசனையை நான் சொல்லுகிறேன். அவ்விதம் ஒரு விசாரணை கமிட்டி போட்டு விசாரித்து ஒரு ரிப்போர்ட்டை கவர்ண்மெண்டுக்குக் கொடுக்கச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக தஞ்சை ஜில்லாவில் பிறந்து காங்கிரஸில் பல நாள் பாடுபட்டு காங்கிரஸ் வேலையிலீடுபட்ட கனம் G. நாராயணசாமி அவர்களை கூட கம்யூனிஸ்டு என்று நம்புகிறீர்களா? அவர் ஒரு காங்கிரஸ்காரர். அவரும் இந்த கூலி பிரச்னையைத்தான் சொல்லுகிறார். அவர் வேறு விதமாக சொல்லவில்லை. ஆனால் கம்யூனிஸ்டுகள் வேலையை இவர் செய்கிறார் என்று பல விதமாக சொல்லுவதாக கேள்விப்படுகிறேன். அதைப்பற்றிக் கேட்க வருந்துகிறேன். காங்கிரஸ் சபையிலிருந்துகொண்டு ஹரிஜனங்களின் குறைகளைத்தான் எடுத்துச்சொல்லுகிறார் அவரும். வேறு ஒன்றும் அவர் சொல்லவில்லை.

"இப்பொழுது ஹரிஜனங்களுக்கு சர்க்காரில் மூன்று செண்டு நிலம் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் அதற்கு முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஹரிஜனங்கள் மீது கருணை கூர்ந்து மூன்று செண்டு கொடுக்கும் போது அதில் அவர்களுடைய குடும்பம் வாழமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். அந்த மூன்று செண்டில் ஒரு புருஷன், அவனுடைய மனைவி, பிள்ளை, ஆடு, மாடு, மற்றும் எல்லாம் வைத்துக்கொண்டு எப்படி வாழமுடியும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். இந்த மூன்று செண்டை ஆர்ஜிதம் செய்தால் எப்படியாவது

மனைக்குப் பக்கத்திலுள்ள மீதி நிலத்தை பிராசுதார்கள் தன்னுடைய மனை என்று சொல்லிக்கொண்டு பாத்தியத்திற்கு வந்துவிடுவார்கள். தனியாக கொடுக்கும் இந்த மூன்று செண்டு அல்லது ஒன்பது குழி நிலத்தை களம் வைக்கவேண்டுமென்று சொல்லிவிட்டால் ஹரிஜனங்களுடைய நிலை என்ன வாகும் என்பதை சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த மூன்று செண்டு போதாது, குறைந்தபட்சம் ஆறு செண்டாவது கொடுக்கவேண்டும்."

Mr. SPEAKER:—"உங்களுடைய நேரம் முடிந்து விட்டது".

The House will now adjourn and meet again at 10-30 a.m. tomorrow, Thursday, 24th July.

The House then adjourned.

MADRAS STATE—*cont.*

II. EXPENDITURE ON REVENUE ACCOUNT—*cont.*

(In Lakhs of Rupees.)

" தவிர சென்னை மாகாணத்தில் ஹரிஜனங்களுக்கு புரம்போக்கு நிலங்களை அடமானம் செய்யும்படியாக சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்பொழுது சிலருக்கு அடமானம் செய்தும் பட்டா செய்யப்பட்டுமிருக்கிறது. அந்த நிலங்களெல்லாம் இப்பொழுது சாகுபடி செய்யப்படாமல் கரம்பையாக இருக்கின்றன. காரணம் என்னவென்றால் ஆறு வருஷ காலமாக மழை இல்லாததால் அந்த நிலங்கள் கரம்பையாக இருக்கின்றன. ஆகையினால் சர்க்கார் இந்த ஹரிஜனங்களுக்கு பண உதவி செய்து கொடுத்து அதாவது நீண்ட கால கடன் கொடுத்து கிணறுகள் வெட்டிக் கொள்ளும்படியாக செய்தால் அந்தந்த நிலங்களையெல்லாம் சீக்கிரத்தில் சாகுபடிக்குக் கொண்டு வர முடியும்.

" இரண்டாவதாக வட ஆற்காடு ஜில்லாவில் அநேகம் கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் குடியிருக்க வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஜில்லா அதிகாரிகளுக்கு மனு செய்திருக்கிறார்கள். அதன் பேரில் ஜில்லா அதிகாரிகள் கொடுத்த உத்தரவின் பேரில் ஹரிஜன மக்கள் பணம் திரட்டி அங்கங்குள்ள கஜானாக்களில் செலுத்தி இருக்கிறார்கள். அவ்விதம் செலுத்தி மூன்று, நான்கு வருஷங்களாகியும் அந்த ஹரிஜனங்களுக்கு இன்னும் இது வரையில் எந்த வீட்டு வசதிக்கும் மனைக் கட்டுகள் கொடுக்கவே இல்லை. இது ரொம்பவும் வருத்தப்படக்கூடிய விஷயம்.

" வட ஆற்காட்டில் திருவண்ணாமலை தாலூகா, செங்கம் தாலூகாக்களில் சுமார் 300 கிராமங்களிருக்கின்றன. அந்த முன்னூறு கிராமங்களிலும் ஹரிஜனங்கள் வாசம் செய்து வருகின்றார்கள். அந்த ஹரிஜனங்களுக்கு அந்த கிராமங்களில் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க வசதி கிடையாது. திருவண்ணாமலை டவுனில் மூன்று ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இந்த கிராம ஹரிஜன மாணவர்கள் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு வந்து உயர்ந்த படிப்பு படிக்க ஆசைப்படுகிறார்கள். அதற்கு போதுமான வசதி இல்லை. சாப்பாட்டிற்கு வசதி இல்லை. இருந்து படிக்க வசதி இல்லை. ஆகவே காருண்ய சர்க்கார் ஹரிஜனங்கள் மீது கிருபை செய்து திருவண்ணாமலையில் ஒரு ஹரிஜன ஆஸ்டலை கொஞ்ச காலத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" தவிர இன்று இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அந்த விஷயத்தை இந்த சபையில் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனால் டயம் இல்லாததால். . . .

[24th July 1952

SRI P. THANGAVELU :—" Mr. Deputy Speaker, Sir, in supporting the cut motion, I wish to make a few observations regarding the miserable plight of the Harijans in our State. The very word ' Harijan ' was coined as early as 1933 by the Father of our Nation to give a better social status and recognition to a particular section of our community but the condition of the Harijans continues to be the same even to-day. True, our Constitution has abolished untouchability and its practice in any form has been forbidden, but every one of the Members of this House knows how far this provision of the Constitution has been put into actual practice. The Harijans are not really treated as respectable citizens. I am sorry to say that they are treated worse than animals and even worse than the slaves of ancient Rome. What exactly might be the reason for this unchanging attitude on the part of the Caste-Hindus towards the so-called untouchables, the Government must find out, and they must suggest ways and means to bring these unfortunate people to the level of the so-called caste-Hindus.

" I wish to touch upon the discrimination that obtains between the Hindu Harijans and Harijans converted to Christianity. Christian converts from the Harijan community are not given the same privileges, facilities and concessions as are given to the Hindu Harijans regarding their admission in educational institutions as well as in recruitment to Government services. Converts to other religions from the scheduled classes are as much entitled to the privileges and concessions that are given to the Hindu Harijans because every one will agree that on account of a change of faith, these people cannot be considered to have economically or otherwise improved their position. This discrimination against these people should not be continued hereafter. Article 15 of the Constitution provides that no discrimination merely on the ground of birth, race or religion must be made, and according to that provision of the Constitution, Christians converted from Scheduled Castes must be given the same preference as is given to the Harijans of the Hindu community. There are schools for Harijans, namely, Labour schools, in certain select areas in the districts. In these schools poor Harijan boys are supplied with mid-day meals but in the case of Harijan convert boys, they are not supplied with the mid-day meals. I request, Sir, that these poor Harijan boys also should be supplied with mid-day meals.

" Coming to the question of Backward communities I feel it is no exageration to say that there is not much difference between the members of the Backward communities and the Harijans except for the fact that the members belonging to the Backward communities are not considered as untouchables but the Harijans are considered to be untouchables. But regarding the sufferings under which these people labour, the condition is more or less the same, and they suffer to the same extent as do the Harijans. The backward communities form more or less 60 per cent of the population. Considering this aspect of the matter, I must submit that the sum allotted in the Budget is very negligible indeed. I request the Government to allot more money according to their

24th July 1952] [Sri P. Thangavelu]

strength in the population of the State in order that they may be helped by way of fee concessions, scholarships, etc. In regard to admission to educational institutions, 25 per cent of the seats has been allotted to the Backward communities. I submit that the reservation is not enough, and it should be increased in proportion to the strength of the Backward communities in the population. In giving effect to these reservations, the members belonging to the Backward communities are admitted into the educational institutions or are recruited to Government service, in the first instance on the basis of merit and efficiency. But, if, working on that footing, the percentage allotted to that community is reached, they stop with that and no further recruitment or admission from those communities is made. I request that students from the Backward communities, in addition to admission to their reservation on the percentage allotted to them, might also be allowed to compete with other communities purely on the basis of merit and efficiency."

*SRI L. ANANDAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை நான் ஆதரிக்கின்றேன். தென்னற்காடு ஜில்லாவில் ஹரிஜனங்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் குடியிருக்க வீடில்லாமலும், குடிதண்ணீர் வசதியில்லாமலும், உழுது பயிர் செய்ய நிலமில்லாமலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நிலமில்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுத்து, குடியிருக்க வசதியும், குடி தண்ணீர் வசதியும் செய்துதர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். 3-30 p.m.

" என்னுடைய தொகுதியிலிருக்கும் ஹரிஜன மக்களுக்கு கல்வியறிவு என்பதே கிடையாது. அதுவும் எங்கள் தாலூகாவில் இரண்டு ஹைஸ்கூல்கள்தான் இருக்கின்றன. கள்ளக்குறிச்சியில் மட்டும் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் ஒரு வருஷமாக சுமார் 30 மாணவர்களுக்கு உணவளித்து வருகிறது. நாளது வரையிலும் அந்த ஹாஸ்டலுக்கு அங்கிகாரம் அளிக்கப்படவில்லை. ஆகையால், உடனடியாக அந்த ஹாஸ்டலுக்கு மான்யம் கொடுத்தும், கல்வியில் பிற்போக்காகவுள்ள பரம ஏழையான ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்கொடுத்து, ஹாஸ்டல் ஆகாரச் செலவுகளையும் சர்க்காரே ஏற்று, ஹரிஜன மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வரும்படி, ஹரிஜன முன்னேற்றத்தில் அக்கரை கொண்ட கனம் ராஜாஜி சர்க்காரை கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" கள்ளக்குறிச்சி தாலூகாவில் மின்சார வசதி என்பதே இல்லை. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக மின்சார வசதி செய்து, உணவு உற்பத்திக்கு உதவுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றேன்."

*SRI M. PALANIANDI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ ராமசாமி நாடார் அவர்கள் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசும் காலத்தில், ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று ஐந்தாண்டுகளாக எவ்வளவோ ரூபாய் செலவழித்தாலும்கூட, அவர்கள் முன்னுக்கு வரவில்லையென்றுதான் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியோ, மற்ற கட்சியாரோ சரிவர கிராமங்களில் சென்று பிரசாரம் செய்து, அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளவில்லையென்பது தெரியும்.

" ஜில்லா போர்டு தேர்தல் நடந்த காலத்தில் மக்கள் சொன்னார்கள் ; அதாவது உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்பவர்கள், " என் வோட்டுப்போடு என்று கேட்கிறீர்கள் ? பள்ளனையும் பறையனையும் ஒன்றுசேர்த்துவிட்ட காங்கிரஸ்காரர்களுக்கு நாங்கள் என் வோட்டு போடவேண்டும் ?" என்று சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பைப்பற்றி மக்களிடையே

[Sri M. Palaniandi] [24th July 1952

சரியானபடி பிரசாரம் செய்யாத காரணத்தினால், இந்தத் திட்டம் சரிவர கிராமங்களில் அனுசரிக்கப்படாமல் இருக்கின்றது. காங்கிரஸ் சரியானபடி பிரசாரம் செய்திருந்தால் ஹரிஜனங்கள் கொஞ்சம் முன்னேற்றமடைந்திருக்க முடியும். கோவிலில் அவர்கள் நுழையக்கூடாது என்று இன்னும் ஜாதி இந்துக்களால் சொல்லப்படுகிறது. அதைத் தடுப்பதற்கு சர்க்கார் சட்டம் கொண்டுவந்தும் அது சரிவர அமல் நடத்தப்படவில்லை. ஹரிஜனங்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடுக்கப்படுகிறார்கள். ஹரிஜனங்கள் இது விஷயத்தை ஆபீசர்களுக்கோ, காங்கிரஸ்காரர்களிடமோ தெரிவித்து விட்டால், அடுத்தநாள் பண்ணையில் வேலை செய்பவனுக்கு நிலம் இடையாது என்று விரட்டியடிக்கப்படுகிறான். இம்மாதிரியாக ஹரிஜனங்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற்றமடையும்படிச் செய்யவேண்டும். பொருளாதாரத்தில் அவர்கள் உயர்வை அடையாமல், அவர்களுக்குக் கோவிலைமட்டும் திறந்துவிட்டால் போதாது. ஆகையால், அவர்களுக்கு வேண்டிய நல்ல புறம்போக்கு நிலங்களில் இரண்டு ஏகராவது ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படவேண்டும்.

" உண்மையாகச் சொல்லுகிறேன், 375 அங்கத்தினர்களும் சேர்ந்து கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க பாடுபட்டால், நிச்சயமாக எழை ஹரிஜனங்களுடைய நிலைமையை ஐந்து ஆண்டுகளுக்குள் உயர்த்திவிடமுடியும். அதற்குச் சரியான பிரசார இயந்திரம் வேண்டும்.

" கடவுளைப்பற்றிப் பேசும்போது ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால், ஹரிஜனங்கள் என்ன பொருளாதாரத்தில் முன்னேறினாலும்கூட, ஜாதி இந்துக்கள் அவர்களை சமமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அந்த மனப் பான்மை மாறவேண்டும். கனம் சபாநாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சிக்கு வந்தபோது, அவரை அய்யம் பாளையத்திற்கு அழைத்துச் சென்றோம். அவரையே கோவிலில் நுழையக் கூடாதென்று தடுத்துவிட்டார்கள். அடுத்தநாள்தான் அவர் சத்தியாக்கிரகம் செய்து கோவிலில் நுழைந்தார். சபாநாயகர் பதவியில் இருக்கக் கூடிய அவரையே கோவிலில் நுழையக்கூடாதென்று தடுத்து நிறுத்தி விட்டார்களென்றால், சாதாரண ஏழைகளால் என்ன செய்யமுடியுமென் பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகையால், சட்டத்தினால் மட்டும் ஒன்றும் செய்துவிடமுடியாது. ஜாதி இந்துக்களின் அடிப்படை எண்ணங்களே மாறவேண்டும். ஹரிஜனங்கள்பால் அவர்களுக்கு மன மாற்றம் ஏற்படவேண்டும். அதற்குப் போதிய பிரசாரம் வேண்டும். ஹரி ஜனங்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் இன்னும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடையும்படிச் செய்யவேண்டும்.

" மால்வாய் கிராமத்தில் 30 வீடுகள் சூரையாடப்பட்டன. அவர்கள் தண்ணீர் எடுத்ததன் காரணமாக உயர்ந்த ஜாதிக்காரர்கள் சிறை செய்யப் பட்டார்கள். 2, 3 கேஸ்கள் போடப்பட்டன. கேஸ்கள் என்ன ஆயிற்று? நீதியும், நிர்வாகமும் இரண்டும் சேர்ந்திருப்பதன் காரணமாக, 2, 3 கேஸ்கள் தள்ளுபடியாகி விட்டன. தள்ளுபடியானபிறகு, இன்னும் அவர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். 10 கிராமங்களில் அவர்களுக்கு வேலை கொடுப்பது இடையாது, தண்ணீர் எடுத்ததன் காரணமாக. ஆகையால் ஜாதி இந்துக்களின் மனம் மாறவேண்டும்.

" ஹரிஜனங்களுக்கு இரண்டு ஏகர் நிலம் கொடுத்தாலும்கூட, மற்றவர்களிடம் மனமாற்றம் ஏற்பட்டால்தான் அவர்கள் சரிவர வாழ்க்கை நடத்த முடியும். ஆகையால் காங்கிரஸ் கட்சியிலிருந்தாலும் சரி, மற்ற கட்சியிலிருந்தாலும் சரி, ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாக எல்லோரும் ஒன்று பட்டு காரியங்களை நடத்தவேண்டும். இங்கிருக்கும் எல்லோரும் சேர்ந்து கொண்டு, பிரசாரம் செய்து, எப்படியாவது ஹரிஜனங்கள் முன்னுக்கு வந்து விடவேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். கிராமங்களில் அவர்கள் இன்று நடுங்கி, ஒடுங்கி, சப்தநாடியும் அடங்கிக்கொண்டிருந்தால், அவர்கள் எப்படி இந்த நாட்டில் வாழமுடியும்? அரசாங்கம் ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்யவேண்டும். சரியான பிரசாரத்தையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்."

24th July 1952]

*Sri G. SURYANARAYANA :—" అధ్యక్షా, దేశములో హరిజన సమస్యలు యీనాటివి కావు. కాంగ్రెసు ప్రభుత్వం ఈ సమస్యల పరిష్కారము విషయమై అనేకము చెప్పుటయేగాని ప్రత్యక్షంగా చేసింది మాత్రం శూన్యం. అస్పృశ్యతా నివారణ చట్టము ప్రభుత్వమువారు పెట్టారు ఈ దేశములో యీ అస్పృశ్యతా నివారణకు చోటులేదు. యీ చట్టము అమలులో పెట్టబడిందేగాని దానిని పాటించినవారు ఎవ్వరు ఉన్నట్టు కనబడుటలేదు. ఈ సందర్భములో యీ చట్టము ఉన్నను ఒకటే, లేకున్నను ఒకటేనని చెప్పగలను. ఈ రాష్ట్రములో హరిజనాభివృద్ధి ఎంతవరకు చెందింది అంటే, ఆ విషయంలోకూడా progress ఏమాత్రం కనబడదు. ఈ హరిజనులందరు భూగ్యము ఏలాగునున్నారో, యిప్పుడు ఆదే విధముగానున్నారని గట్టిగా చెప్పగలను. హరిజనుల విషయములో అంటరానితనం ఆనేది గ్రామములలో యింకా పోలేదు. ఒక ఉదాహరణ చెప్పదలచుకొన్నాను. ఈ రాష్ట్రములో విశాఖపట్నం, శ్రీకాకుళం జిల్లాలలో యీ నాటికికూడా పల్లికులపులలోగాని, కోనేరులలోగాని హరిజనులకు తావులేదు. ముఖ్యంగా యీ హరిజనులకు ఎట్టి సీటి సౌకర్యాలు ఎక్కడనూలేవు. గ్రామాలలో యీనాటివరకున్నూ పల్లికు వాళ్ళు, కోనేరులు వున్నచోటు, యీ హరిజనులు ఉపయోగించుటకు ఆర్హత లేకుండాపోయింది. యీ నాటికిన్నీ గ్రామములో కరణం మిరాసైన పలుకుబడిగల రైతులు, యితర కులములవారు యీ హరిజనులు గ్రామములోనికి వెళ్ళినప్పుడు, యింకనూ పూర్వపద్ధతులను విడువకుండా భుండగలందులకు యీ హరిజనులమీద దౌర్జన్యములుకూడా చేస్తున్నారు. గ్రామములలో ఇప్పటికిని ఏదో విధమైన అడ్డంకులు పెట్టి యీ హరిజనులకు స్వేచ్ఛ లేకుండా చేస్తున్నారు. ప్రభుత్వంవారు పెట్టిన అస్పృశ్యతా నివారణ చట్టము ఆమలులోకి వచ్చినప్పటికిని, గ్రామములలో మంగలిషాపులలోగాని, దేవాలయములలోగాని పల్లికు స్థలములు వగైరా చోట్లలోగాని యింకనూ హరిజనులకు చోటు లేకుండా వున్నది. ప్రభుత్వం నెలకు ఒకసారి హరిజన దినోత్సవం జరిపించవలసిందని ఆయా స్థానికి ఉద్యోగులకు ఉత్తర్వులు చేసింది. ఆ కార్యక్రమం ఎక్కడ జరపకుండ అబద్ధపు రిపోర్టులు వ్రాస్తున్నారు. దేవాలయంలోకిపచ్చి ఉత్సవములు చేసినట్టు Endowments Board వారికి వ్రాస్తున్నారేగాని, నిజముగా ఈ హరిజనులకు గ్రామములలో స్వేచ్ఛలేకుండావున్నది. గనుక ప్రభుత్వంవారు యీ విషయములో యీ హరిజనులకొరకు తగిన వున్నరువులు పంపగలందులకు కోరుతున్నాను. ఇదియునుగాక యీ హరిజనులకు గ్రామ ఉద్యోగాలను ఆనగా, మునసబు, కరణం వుద్యోగాలను యిచ్చినఎడల యీ అస్పృశ్యత కొంతవరకు నివారణమగునని నా నమ్మకము. ఈ హరిజనుల అస్పృశ్యత నివారణ చట్టము ఎంతవరకు ఉపయోగపడిందనే విషయమై యింతవరకూ ప్రభుత్వంవారు శ్రద్ధవుచ్చి కొన్నట్లులేదు. అందువల్ల యీ హరిజనులకు స్థానిక ఉద్యోగాలలో ఎక్కువ ప్రాతినిధ్యము యివ్వవలెనని కోరుచున్నాను. గ్రామములలో ఈ హరిజనులపై దౌర్జన్యాలుచేసి వారిమీద అబద్ధపు రిపోర్టులు చేయిస్తున్నారు. మా విశాఖపట్నం, శ్రీకాకుళం జిల్లాలలోను, నియోజకవర్గంలోని విజయనగరం తాలూకాలలో కూడా యీ హరిజనులకు దౌర్జన్యాలు జరిగినవిగాని ఎక్కడకూడా, నిరూపింపబడలేదు.

" ఇకపోతే యీ హరిజనులకు బంజరు భూములు యిచ్చే విషయములో ప్రభుత్వమువారు తదేపదే ప్రకటనలు చేస్తున్నారు పేపర్లలో ఆర్డర్లు, ప్రకటనకేగాని, క్రియారూపంగా ఉన్నది. మా విశాఖపట్నం, శ్రీకాకుళం జిల్లాలలో ఉన్న యువంతులకొలది బంజరు భూములకొరకు వందలకొలది దరఖాస్తులు పెట్టారు. ఇంతవరకూ యీ దరఖాస్తులలో ఒకటికూడా పరిష్కారము కాలేదు. ఈ దరఖాస్తులువాటంతట్టుకు 3-40 p.m.

[Sri G. Suryanarayana] [24th July 1952

[illegible] హరిజనులపైయున్నది. ఈ ఐదెకరాల భూములు యింతవరకూ యీ జిల్లాలోవున్న పెద్దపెద్ద భూస్వాములు ఆక్రమించుకొని సాగుచేసుకుంటూ ఉన్నారు. గవర్నమెంటు రెవిన్యూ డిపార్టుమెంటుకు సంబంధించిన ఉద్యోగస్తులు అనగా Revenue Inspector, Tahsildar వచ్చినప్పుడు యీ దరఖాస్తుల్ని చేసినవారిని విచారించకుండా, యీ పెద్దపెద్ద భూస్వాముల పలుకుబడివల్ల, గ్రామ ఉద్యోగస్తులవద్దకు ఆయా గ్రామాలకు వెళ్ళి గ్రామ ఉద్యోగస్తులు చెప్పిన దుస్సలహాలతో పరిష్కారము చేస్తున్నారు. వాని ఒక హరిజనుడైనను పిలిపించి, విచారణ చేయలేదు. దరఖాస్తు చార్జీకు నిజముగా భూములు ఉన్నవా, లేవా అనే విషయము ఎత్తుకోకుండా గ్రామములలో పలుకుబడిగల భూస్వాములనుండి యీ భూముల స్వాధీన తప్పించుటకు ప్రయత్నమే లేకుండాయున్నది. యీ జిల్లాలలో యీ విచారణ విషయమై వచ్చిన స్థానిక ఉద్యోగస్తులు యీ దరఖాస్తులు యేవిన్ని పరిష్కారం యింత వరకు చేయలేదు. గనుక ప్రభుత్వంవారు యీ విషయములో తగు శ్రద్ధవహించి, భూస్వాములవద్దనుండి యీ ఆక్రమ ఆక్రమణలను తొలగించి నిరుపేదలైన హరిజనులకు ఐదెకరాల భూములు పట్టాలకిచ్చే విధానము త్వరలో చేయగలందులకు ప్రభుత్వంవారిని కోరుతున్నాను."

*SRI S. ARUMUGAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே ஹரிஜன மானியத்தை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் தொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

"மாணிக்க வாசகர், பட்டிணத்தார் போன்ற மகான்கள் பல அற்புதங்களைச் செய்து மக்கள் அனைவரையும் இன்பத்தில் ஆழ்த்தியதுபோல இன்று கனம் ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியார் மக்களுக்குள்ள குறைகளையும், கஷ்டங்களையும் போக்கி எல்லா மக்களும் இன்னல் இல்லாமல் வாழச் செய்வார்கள் என்று ஹரிஜன மக்கள் எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தக்க திட்டங்களையும் இந்த சர்க்கார் போட்டிருக்கிறது. ஆகையால் பொதுவாக எல்லா இடங்களிலுமுள்ள ஹரிஜன மக்களின் குறைகளை உடனடியாக கனம் ராஜாஜி அவர்கள் நீக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர்கள் இந்த நாட்டில் இருந்தகாலத்தில் ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி இவைகளில் எவ்வளவு ஸ்தானங்கள் ஹரிஜனங்களுக்கென்று இருந்ததோ அதே ஸ்தானங்கள்தான் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கின்றன. அது இப்பொழுது ஹரிஜனங்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. ஆகையால் இப்பொழுது ஒவ்வொரு ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி இவைகளுக்கு அந்தந்த ஜில்லாக்களிலுள்ள ஜனசம்மிதாசாரப்படி ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டுமென்பதாக நான் கனம் ராஜாஜி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி, பஞ்சாயத்து போர்டு இவைகளிலெல்லாம் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் மானியம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஹரிஜன அபிவிருத்திக்காக அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்பதாகவும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள ஹரிஜன சேஷமாபிவிருத்திக் கமிட்டியில் ஹரிஜன எம்.எல்.ஏ.கள் எல்லோரையும் நியமிக்கவேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜனப் பிள்ளைகளுக்கு இப்பொழுது ஹாஸ்டல் மிகவும் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகமாக்க வேண்டுமென்பதாகவும், ஹரிஜன மாணவர்களுக்கு நிறைய ஸ்காலர்ஷிப்பை தாராளமாக கொடுக்க வேண்டுமென்பதாகவும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக சேலம் ஜில்லாவில் பெண்களுக்கு ஹாஸ்டல் வசதி மிகவும் குறைந்திருக்கிறது. அதுவும் சேலம் டவுனில் ஒரு ஹாஸ்டலும் பெண்களுக்குக் கிடையாது. ஆதலே பெண்களுக்கு ஒரு ஹாஸ்டலும், என்னுடைய தொகுதியான திருச்செங்கோடு தொகுதியில் ஒரு ஹாஸ்டலும் திறக்கவேண்டுமென்பதாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

24th July 1952] [Sri S. Arumugam]

"வீடு கட்டிக்கொள்ள இடமில்லாமல் ஹரிஜன மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்பதாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக வீடு கட்டிக்கொள்ள இடமில்லாமல் திருச்செங்கோடு தாலூகாவில் சங்ககிரி என்ற சேரி மலைகள்மீதும் குன்றுகள் மீதும் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். காற்று அதிகமாக அடித்தாலோ, மழை பெய்தாலோ மலைகள் சரிந்து விழுந்து அந்த மக்களுக்கு அபாயமளிக்கும். ஆகையால் உடனேயே அவர்களை அந்த இடத்தைவிட்டு அகற்றி கிராமங்களில் அவர்களுக்கு இடம் தேடித்தரவேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொண்டு என்பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

*SRI A. AYYARU :—"கனம் சபாநாயகர் அவர்களே : தாழ்த்தப்பட்டவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி என் தோழர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம் அரசாங்கமும் மஹாத்மா காந்தி அவர்கள் சொன்னதுபோலவே தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போடும் சட்டங்கள் எல்லாம் சட்டப் புஸ்தகங்களில்தான் இருந்துகொண்டிருக்கின்றன. காரணம் என்னவென்றால் அந்தச் சட்டங்களை அமல் நடத்தும் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கின்ற அதிகாரிகள் சரியாக நடந்துகொள்வதில்லை. அரசாங்கத்திற்கு அதிகமான வேலைகளை ஏற்படுத்திவிட்டார்கள். அந்த வேலைகளைப் போக்குவதற்கு நம் அரசாங்கம் மிகவும் கவனமாக வேலை செய்யவேண்டும். அந்தந்த ஜில்லாக்களிலிருக்கிற அதிகாரிகள் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் ? இதுவரையிலும் அவர்களுக்குச் செய்திருக்கும் காரியங்கள் என்னென்ன ?" என்பதாக வருஷந்தோறும் கேட்டால்தான் அவர்களுக்கும் கொஞ்சம் பயம் ஏற்படும். நன்மை என்னென்ன செய்திருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லவேண்டுமே யென்பதற்காகவாவது ஏதாவது காரியங்களைச் செய்துகொண்டே யிருப்பார்கள். அப்பொழுதுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் முற்போக்கு அடைவதற்கு வழியேற்படும் என்பதாக நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"இதைப்போலவே ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கின்ற கல்வி அதிகாரிகளுக்கு வருஷந்தோறும், "எந்தெந்த வகுப்பிலே எவ்வளவு ஹரிஜன மாணவர்களை சேர்த்துக்கொண்டிருக்கிறீர்கள். எத்தனை மாணவர்கள் காலேஜில் சேர்ந்திருக்கிறார்கள். எத்தனை மாணவர்கள் டிரைனிங் ஸ்கூலில் சேர்ந்திருக்கிறார்கள்" என்பதான விஷயங்களை உடனுக்குடன் அனுப்பிவைக்கும்படி சர்க்கார் கேட்டுக்கொண்டால்தான், ஜில்லாக்களிலுள்ள அதிகாரிகள் ஹரிஜன மாணவர்களுக்கு அதிகமான நன்மைகளைச் செய்வார்கள். இதையும் சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக நம் மாகாணத்திலுள்ள நிலங்களின் வரிகளையெல்லாம் வசூலிப்பதும், சர்க்கார் உத்திரவுகளை கிராமங்களில் பரப்புவதுமான தொழிலை கிராம அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். மணியக்காரர்; கணக்குப்பிள்ளை இவர்கள்தான் இப்பொழுது இந்தத் தொழிலைச் செய்துகொண்டு வருகிறார்கள். இவர்களுக்கு உதவியாக தலையாரி, வெட்டியான் போன்ற சிப்பந்திகளையும் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் வசூலித்துத் தரும் தீர்வைப்பணத்தை தலையாரிகள் கொண்டுபோய் கட்டிவிட்டு வருகிறார்கள். இவர்களுக்கு இப்பொழுது மாதம் ஒன்றுக்கு 11 ரூபாய்கள் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஒரு மனிதன் வயிற்றை வளர்ப்பதற்கு இது கூட்டமா ? இந்தப்பணத்தை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள் ? பெரும்பாலும் ஹரிஜனங்கள்தான் இந்தவேலையில் இருக்கிறார்கள். ஆகையால் தயவுசெய்து சர்க்கார் இந்த தாழ்த்தப்பட்ட கிராம அதிகாரிகளின் சம்பளத்தை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்பதாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக உடையார்பாளையம் தாலூகாவில் ஹரிஜன மக்கள் சொம்பவும் பிற்போக்கான நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் சொல்லவேண்டியதில்லை. அதை கனம் மந்திரிகள் நன்றாக

உணர்ந்திருப்பார்கள். வெள்ளையர் ஆட்சி காலத்தில் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சி வந்துவிட்டால் ஹரிஜன மக்கள் தெருக்களில் போகும்போது சுளுக்குடுக்கையை தோளில் மாட்டிக்கொண்டுதான் எச்சில் உயிழ நேரிடும் என்று சென்ற ஐந்து ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியில் அதேமாதிரி ஆகிவிட்டது. உடையார்பாளையம் தாலுகாவில் தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்கள் எந்த இடத்திற்கும் போக உரிமையிடையாது. ஆகையால் சர்க்கார் இதில் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

3-50 p.m. SRI A. VAIKUNTAM:—"கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரிக்கிறேன். ராமநாதபுரம் ஜில்லா ஒரு பஞ்சப் பிரதேசம் என்று எனக்கு முன்பு பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அதிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் மிகவும் பஞ்சம் ஏற்பட்டு அங்கிருக்கும் ஹரிஜன மக்கள் தண்ணி மணிக்கும் உணவிற்கும் கஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் பல இடங்களுக்கு சென்றுவிட்டார்கள். மேலும் பல மெம்பர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவைப்பற்றியும், அங்குள்ள விவசாய முறைகளைப் பற்றியும், மற்றும் சீர் திருத்தம் செய்யும் முறைகளைப் பற்றியும் ஹரிஜனங்கள் சரியான முறையில் கையாளப்படவில்லை என்றும் எடுத்துச் சொன்னார்கள். நான் தேர்தல் காலங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது பலவாறாக என்னிடம் குறைகளைக் கூறிவந்தார்கள். அவைகளை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து தெரியப்படுத்துகிறேன்.

"இந்த தாலுகாவில் இன்னும் நெசவாளர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். Control நடந்த காலத்தில் நெசவாளர்களில் பலர் பணக்காரர்களாகவும், பலர் பணம் இல்லாத நிலைமைக்கும் வந்துவிட்டார்கள். அங்கிருக்கும் நெசவாளர்களுக்கு 40-ம் நம்பர் நூலையும் இன்னும் அதற்குக் கீழ்பட்ட நூல்களையும் கொடுத்து உதவினால் நெசவாளர்கள் அவைகளை வைத்துக்கொண்டு புடவை, வேஷ்டி முதலியவைகளை உற்பத்தி செய்து வாழ்க்கையை நல்லபடியாக நடத்துவார்கள் என்று கவர்ன்மெண்டிற்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அங்கே Development சம்பந்தமாக மின்சாரம் பல இடங்களுக்கு கொண்டுபோகப்படுகிறது. வத்தராயிருப்பு பிர்க்காவில் ஒன்பது கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு நீர் பாசனத்திற்கு மின்சார சம்பந்தமான வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இதை சீக்கிரம் செய்து கொடுக்கும் படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மீனையடிவாரங்களிலுள்ள கிணறுகளில் 21 அடிக்கு கீழ்தான் தண்ணீர் ஊத்துக்கள் கிடைக்கின்றன. அவ்வளவு ஆழம் வெட்டி தண்ணீர் இரைக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு மின்சாரவசதி செய்து கொடுத்தால் உணவு உற்பத்தி செய்து கொடுக்கலாம். அதனால் உணவு பஞ்சத்தையும் தீர்க்க முடியும். உணவு உற்பத்தியையும் பெருக்கமுடியும். இப்பொழுது விவசாயம் சரியான முறையில் நடக்கவில்லை. அங்குள்ள விவசாயத்திற்கு வேண்டிய மின்சார சலுகை செய்து கொடுத்து விவசாயமகளை ஆதரிக்கும்படியாக கவர்ணமெண்டிற்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக அங்கே கிராமங்களில் சுமார் ஆயிரம் மாணவ மாணவிகள் படிக்கும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வத்தராயிருப்பு பிர்க்காவில் ஒரு ஹாஸ்டல் போன வருஷம் வைக்கப்பட்டது. அதில் சென்ற ஆண்டில் 12 மாணவர்களுக்கு மான்யம் அளிக்கப்பட்டது. இந்த வருஷம் 14 மாணவர்களுக்கு மான்யம் அளிக்கப்பட்டிருக்கிறது. படிக்கக்கூடியவர்கள் ஆயிரக்கணக்கில் இருப்பதால் ஹாஸ்டலுக்கு சரியான முறையில் அதிகப் பேருக்கு மான்யம் அளித்து ஹரிஜன மக்களைக் காப்பாற்றவேண்டும். இவ்விதம் ஒரு ஹாஸ்டல் அமைத்து மற்ற backward Community-களின் மக்களையும் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கவர்ண்மெண்டார் ஹோட்டல் திரப்பு ஆலயப்பிரவேசம் போன்ற சில திட்டங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த திட்டங்களை கிராமங்களுக்குக் கொடுத்திருப்பதால் Caste ஹிந்துக்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் சில விடங்களில் சண்டைகளும் பூசல்களும் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கு நடக்கும் சண்டைகளையும் பூசல்களையும் கவர்ண்மெண்டார் கவனித்து அங்கு சமாதானமாகவே அந்த திட்டங்களை நிறைவேற்றி வைக்கும்படியாக கவர்ண்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சுதாந்திர முறையிலும் ஹரிஜனங்களுக்கு பல கிராமங்களில் தொந்தரவுகள் இழைக்கப்படுகின்றன. Caste ஹிந்துக்களுடைய தெருவுகளிலுள்ள சாக்கடைத் தண்ணீரை எடுத்து வாய்க்கால் வெட்டி ஹரிஜனங்களுடைய சேரிகளுக்கு திருப்பிவிடுகிறார்கள். அதனால் அங்குள்ள சுகாதார நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. நான் சுற்றுப் பிரயாணம் செய்தபோது இதைப்பற்றி தெரிவித்தார்கள். அதைப் பற்றி பஞ்சாயத்து போர்டு President-க்கும் கலெக்டருக்கும் எழுதி தெரிவித்திருக்கிறேன். அதன் பேரில் உங்களுக்கு நீதி கிடைக்கும்படி முடிவு செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

"மதுவிலக்கு சம்பந்தமாக, மதுவிலக்கு வேண்டுமென்றும் அந்த சட்டம் இருக்கவேண்டும் என்றும் இந்த சபையின் விவாதத்துக்குக் கொண்டு வந்து வோட்டு எடுத்து வந்தோம். இந்த மது விலக்கு வெற்றிகரமாக நடக்கவேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்."

*SRI T. SHANMUGHAM:—"Mr. Deputy Speaker Sir, கனம் ராமசாமி நாடார் அவர்கள் கொண்டுவந்த cut motion-ஐ ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் சொன்ன விதமாக ஹரிஜன ஹாஸ்டல் என்று ஒரு ஹாஸ்டல் இருக்கவேண்டியதில்லை. ஹரிஜன் என்ற பெயரே இருக்க வேண்டியதில்லை என்று வெகு நன்றாக சொன்னார்கள். என்னைக் கேட்டால் அந்தப் பெயரையே ஒழித்துவிடவேண்டும் என்று நான் சொல்லுவேன். ஹரிஜனம் என்ற ஒரு கூட்டம் இருப்பதால்தான் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் ஒரு புரமாக ஒதுக்கப்பட்டவர்களென்றும் அவர்களை ஒதுக்கி இருக்கிறார்கள். அவர்களையும் backward class-ல் சேர்த்து விடலாம். சேரி என்று ஒன்றும் அக்ரஹாரம் என்று மற்றொன்றும் இருப்பது நன்றாக இல்லை. அது ஹிந்து சமூகத்திற்கே இழிவானதாகும். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருப்பது ஹிந்து சமூகத்திற்கே அழகு இல்லை என்று மறுபடியும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"Harijan Welfare Office என்று ஒன்று இருக்கிறது. அந்த ஆபீசர் Secretary ஆகவும், ஜில்லா கலெக்டர் தலைவராகவும், அந்த ஜில்லாவிலுள்ள M.L.A.-க்கள் கமிட்டி மெம்பர்களாகவும் இருந்து வேலை செய்யவேண்டும். இந்த Harijan Welfare Fund நன்றாக உபயோகப்படும்படியாக வேலை செய்யவில்லை. ஒரு கோடி ரூபாயில் பல லட்ச ரூபாய் செலவு செய்தும் சரியான வேலைகள் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே கொடுக்கும் ஒரு கோடி இரண்டு கோடி ரூபாயை நல்லவிதமாக அவர்களுக்குப் போய் சேரும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

"இப்பொழுது சில பள்ளிக்கூடங்களில் லேபர் ஸ்கூல்களில் அவர்களுக்கு இடைவேளை சாப்பாடு போடுகிறார்கள். ஆனால் ஜில்லா போர்டு ஸ்கூல்களில் சாப்பாடுபோடுவது கிடையாது. ஆகவே ஹரிஜனப் பள்ளிக்கூடம் எந்த பள்ளிக்கூடமாக இருந்தாலும் அந்தப் பள்ளிக்கூடத்தில் இடைவேளை சாப்பாடு அதாவது midday meal கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்.

"அவர்களுக்கு கோயில்களையும் ஹோட்டல்களையும் திறந்து விட்டால் மட்டும் போதாது. கோயில்களுக்கு அவர்கள் போக வேண்டுமென்றால் கையில் காசு வேண்டும். கையில் காசு இல்லாவிட்டால் கடவுளை பார்க்க முடியாது. காப்பி ஓட்டலுக்கு போவதாக இருந்தாலும் கையில் காசு வேண்டும். இந்த இரண்டு இடங்களுக்கும் அவர்கள் போக தகுதியற்றவர்கள். என்? காசு இல்லாமலிருக்கிறார்கள். அவர்களை பொருளாதாரத்தில் முன்

[Sri T. Shanmugham] [24th July 1952

னேறும்படி செய்யவேண்டும். அவர்களிடம் பொருளாதாரம் இல்லாததால் தான் அவர்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவு செய்ய வேண்டும். அநேகம் காங்கிரஸ்காரர்கள் தியாகிகள் என்ற பெயரால் 5 ஏக்கர் 10 ஏக்கர் என்று நிலம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களையெல்லாம் திரும்பவும் சர்க்கார் வாங்கிக்கொண்டு இந்த ஏழை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும். அநேக பணக்காரர்கள் நிலம் வாங்கி இருக்கிறார்கள். தியாகிகள் என்று சொல்லிக்கொண்டு தியாகத்திற்கு கூலியாக பெற்றுக்கொண்டார்கள். கூலி பெற்றுவிட்டால் தியாகம் ஆகாது. அதை நியாயமாக திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அவ்விதம் கொடுத்துவிடும்படி கூட கனம் ராஜாஜி உத்தரவு போட்டிருக்கிறார். அநேகப் பேர்கள் இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. கட்டாயம் அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்த ஹரிஜனங்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி ஆரம்ப நாளிலேயே . . ."

SRI G. GOVINDAN:—"கனம் சபாநாயகர் அவர்களே! கனம் மெம்பர் அவர்கள் காங்கிரஸ் தியாகிகள் கூலி பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னார். அந்த வார்த்தையை தயவு செய்து வாபஸ் வாங்கிக்கொள்ளச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

SRI T. SHANMUGHAM :—"5, 10 ஏக்கர் நிலம் கொடுத்தால் அது தியாகம் ஆகாது. கண்டிப்பாக சொல்லுவேன். எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும் (loud applause) தியாகியாக இருக்க வேண்டுமென்றால் நிலம் வாங்கிக் கொள்ளக்கூடாது. ஆகவே தலைவர் அவர்களே முதலில் வாங்கிக் கொண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். பின்னால் உள்ளவர்களுக்கு நிலம் இல்லாமல் போய்விட்டது. இவர்களுக்கு மறுபடியும் நிலம் கொடுக்க ராஜாஜி அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஆகவே கட்டாயம் கொடுத்த நிலங்களை திருப்பி வாங்கிவிடவேண்டும்.

"ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பமான நாள் முதற்கொண்டு T. M. நாயர் முதலிய தலைவர்கள் அவர்களுக்கு பஞ்சமர்களென்றும் பரயர்களென்றும் இருக்கும் கேவலமான வார்த்தையை நீக்கிவிட்டு ஆதித்திராவிடர்கள் என்று அழைத்தார்கள். பிறகு காந்தியார் அவர்கள் ஹரிஜன் என்ற பெயரை வைத்து அழைத்தார். இவர்கள் ஹிந்து மக்களோடு சிறந்து வாழவேண்டும் என்று சொல்லி அவர்களுக்கு இப்படிப்பட்ட தாழ்மை நிலைமை வந்திருப்பது நியாயமில்லை என்று தெரிவித்தார். அதேபோல் இந்த ஹரிஜனங்களை இம்மாதிரியான பிற்பட்ட நிலைமையில் வைத்திருப்பது அழகல்ல என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

4 p.m. SRI P. THIMMA REDDI:—"Mr. Deputy Speaker, Sir, we are living in a state of uncertainty and fear for our life and property in this State. I think, great men of this State and the country have focussed their attention to find out why this atmosphere is prevailing here. I must tell the hon. Members of this House that this fear complex is due to the fact that due and sincere attention has not been paid to the problem of the Harijans and the poor people in this State. If only in the past five years our national Governments—both here and in the Centre had paid due attention and made sincere efforts to solve their problems, there would not have been this somersault in the recent elections and there would not have been a place for the dangerous elements in this House. (Opposition Benches: No, no.) Flies there will be where there is filth, and where there is impure blood the body will be susceptible to epidemics. The most dangerous political propaganda and violent theories—which even the greatest of men

24th July 1952] [Sri Thimma Reddi]

cannot understand—have been preached in the villages, and the poor villagers have been misled by the dangerous elements that have now come into this House. That is why this atmosphere of fear has come to prevail in this State. That has been my humble experience.

"Sir, in my constituency I have been trying for the last so many years to get ten acres of land assigned to ten Harijans who have been cultivating that land for the last 30 or 40 years. There are about 13,500 acres of Government land under the occupation of the poor and landless Harijans. But they have not been assigned to these Harijans. In this connection, I have approached the Collector, the Tahsildar, and the Revenue Inspector and other officials but it has not been possible for me to get the assignment done. This is how the Government are looking after the interests of the poor Harijans!

"Sir, I now come to the wonderful Harijan Welfare Department. In my firka there is a village called Devarkonda. There are about 60 Harijans in this village, and they put up a school in a small house. For the last two years I have been trying to get a building constructed for the school but it has not been possible for me to do so owing to the indifferent and callous attitude of the wonderful Harijan Welfare Department. Sir, if this school had been under the control of the District Board instead of the Harijan Welfare Department, I would have built the school in two months' time.

"Sir, I wish to refer to the plight of the Harijans so far as medical facilities are concerned. In this connection, I must refer to an incident that took place in my village. A Harijan was suffering from chronic fever and I admitted him in the District Headquarters Hospital at Chittoor with the promise that I would take him back to our village after some time. When I returned to my village, after 1½ months that Harijan's wife and children told me with tears in their eyes that he had to return home as proper medicine and food were not given to him. Who is responsible for the misery of that Harijan? The Government are responsible for it as they have not paid any attention to the welfare of the Harijans. Of course, I do not find fault with the present Government which is headed by a proper man who will lead this State from misery to one of prosperity, and the Harijans can expect better treatment hereafter. Unless their problem is tackled in an intelligent and fair manner, there is every danger to this State which may even envelop the entire Indian Union. The Harijan demand is not an ordinary demand. Their very existence is at stake. What do they want? They want that their sweat should not be exploited by others. They want living space. (At this stage Mr. Speaker occupied the Chair.) Why do you deny them that? It is not any landlord's property: it is not any individual's property; it is the property of the Government. They want huts to live in and lands to cultivate. I hope the Government will give top priority to the problem of the Harijans.

[Sri P. Thimma Reddi] [24th July 1952

"Now, I may be allowed to refer to the plight of the scavengers at Chittoor. They live in a place between Kattamanchi and Chittoor—where heaps of filth and manures are stored up, and their children play on these heaps. I ask, is this place fit for human beings to live in? Our Ministers have visited this place in connexion with the Rayalaseema famine. Even Central Ministers visited this place but so far no action has been taken to provide a decent place for them. The Health Officer and the Sanitary Engineer of the Chittoor Municipality have not taken any steps to improve their conditions of living. I hope the Government will look into the matter."

MR. SPEAKER:—"The hon. Member's time is up."

* **DR. P. VARADARAJULU NAIDU:**—"கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன். தீண்டாமையை ஒழிப்பதுபற்றி ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் கவர்ண்மெண்டார் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி பலர் பலவிதமான அபிப்ராயங்களைத் தெரிவித்தார்கள். ஆனால், என்னுடைய கருத்தில், சென்ற 50 வருஷங்களாக நான் இதைக் கவனித்து வந்ததில் அச்சரியமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

"தீண்டாமை, ஜாதிவித்தியாசம் நம் நாட்டில் மட்டுந்தான் இருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. ஐரோப்பா தேசத்திலும், ஆப்பிரிக்கா தேசத்திலும், அமெரிக்கா தேசத்திலும் நிற பேதம் இருக்கிறது. நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இங்கு நாம் ஒரே இனமாக இருக்கிறோம். அதாவது நம்மில் ஒருவருக்கொருவர் வித்தியாசம் நிறத்தில் இல்லை. இன்ன ஜாதியார் என்று நாம் சொல்லிக்கொண்டால் தான் வித்தியாசம் தெரிகிறதேயொழிய, பார்வையிலோ மற்ற எந்த விதத்திலோ வித்தியாசம் இல்லை. எப்படி இந்த தீண்டாமை வியாதி இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. அவரவர்கள் பழக்க வழக்கங்களின் காரணமாகவும், மனதை யொட்டியும், இந்தத் தீண்டாமை ஒரு வியாதியைப்போல் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

"நான் அறிந்தவரையில் மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைவராக ஆனதற்குப் பிறகு தான் நாங்களெல்லோரும் இந்தப் பிரச்னையில் புத்தி செலுத்த ஆரம்பித்தோம். அதற்குப் பிறகு எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் மாறுதல் ஏற்படும். ஒரு அம்மையார் சொன்ன மாதிரி ஆதி திராவிடர்களுக்கு சரியான கூலி கொடுக்கப்பட்டால் அவர்கள் நன்றாக இருப்பார்கள் என்பது வாஸ்தவம், ஆனால், இந்தப் பிரச்னை அவர்களுடைய பொருளாதாரத்தை மட்டும் பொறுத்ததல்ல படிப்பைப்பற்றி மட்டும் வந்ததல்ல. இந்தப் பீடையைத் தொலைப்பதற்கு மனோ உறுதி வேண்டும். காங்கிரஸ் கவர்ண்மெண்டார் ஹரிஜனங்களுக்கு இதுவரையில் செய்துவந்தது குறைவு என்று சொல்லாமல், இன்னும் அதிகமாகச் செய்யவேண்டுமென்று கேட்கவேண்டும். கவர்ண்மெண்டார் இந்த முக்கியமான காரியத்திற்கு வேண்டிய பணத்தைச் செலவு செய்யலாம்.

"ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். தீண்டாமை இருக்கவேண்டுமென்று ஒரு ஹிந்துவும் நினைக்கவில்லை. நினைக்கவும் முடியாது. பழக்க வழக்கம் காரணத்தால் இம்மாதிரியான நிலை இருந்துவந்திருக்கிறது. ஆகையால், ஹரிஜனங்களுக்கென்று தனிப்பட்ட பாடசாலை கூடாது; ஹரிஜனங்களுக்கென்று தனிப்பட்ட பள்ளிக்கூடங்களும் ஹாஸ்டல்களும் வைத்தார்களானால் இன்னும் தாழ்வு மனப்பான்மை (inferiority complex) ஹரிஜனங்களுக்கு தொடர்ந்து வருமேயொழிய அவர்கள் மற்றெல்லா ஜாதியாருடன் தாங்களும் ஒருவர் என்று நினைப்பதற்கே இடமேற்படாமல் போய்விடும். ஆகையால், தனிப்பட்ட பள்ளிக்கூடங்களோ ஹாஸ்டல்களோ இல்லாமல், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப், இலவச-சாப்பாடு கொடுத்து, மற்றவர்களுடன் கலந்து இருக்கும்படிச் செய்யவேண்டும்.

24th July 1952] [Sri P. Varadarajulu Naidu]

"இது விஷயமாக, சில வருஷங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் சர்க்கார் இருந்தபோது லார்டு செம்ஸ்போர்டும் நானும், டாக்டர் அம்பேத்கரும் பேசி, ஒரு கோடி ரூபாய் கவர்ண்மெண்டிலிருந்தும் கொடுத்து, ஹரிஜனங்களுக்கு உயர்ந்த ஜாதியார் இருக்கும் இடங்களில் வீடு கட்டுவதற்குத் திட்டம் வகுத்தோம். பிறகு அது கைவிடப்பட்டுவிட்டது. ஆகையால், ஹரிஜனங்களுக்குத் தனியாக சேரிகளிலோ, தனிப்பட்ட இடங்களிலோ வீடுகள் கட்டுவது போல் அப்படிச் செய்யாமல், எங்கெங்கே உயர்ந்த ஜாதியார் இருக்கிறார்களோ, எங்கெங்கே காலி மனைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொண்டு குடியிருக்கும்படிச் செய்தால், அவர்கள் மனதில் இருக்கக்கூடிய களங்கம் நாளாவட்டத்தில தீர்ந்துவிடும். ஆகையால் எல்லோரும் ஒருமைப்பட்டு, வித்தியாசம் இல்லாமல் பார்க்கவேண்டுமே தவிர, நாங்கள் (ஹரிஜன அங்கத்தினர்கள்) அவசரப்படக்கூடாது. கோபப்படக்கூடாது. தீண்டாமை வியாதியைப் போக்குவதற்கு மன உறுதி வேண்டும். ஆகையால், சர்க்காரும் இன்னும் அதிகமான பணத்தை ஹரிஜன அபிவிருத்திக்குச் செலவழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சர்க்கார் கோரியிருக்கும் மான்யத்தை ஆதரிக்கின்றேன்.

* **SRI T. VISWANATHAM:**—"Mr. Speaker, Sir, a good number of members have already spoken from both sides of this House. The substance of what has been said is the same. Those who are sitting on the Congress Benches as well as those who are sitting on the Opposition Benches have voiced forth the anguish of their hearts, that all that has been done so far for the upliftment of the Harijans has not been adequate. Not only that, we have not been able, after so many years of work, to wipe out this psychology of untouchability from this country. To those of us who belong to the non-Harijan class, it is a matter of great shame, that we have not been able to do that. We admit that we have failed. But at the same time, Sir, we must realise—and all the members belonging to the Harijan community will also realise—how stupendous the task is. Let me assure you, so far as the Opposition Benches are concerned, that the failure is not due to the want of will on the part of those who are sitting on this side. But Sir, the failure is only due to reasons which are practically beyond our control. Sir, this social difference between the Harijan and the non-Harijan, being a thing of ages, with all the efforts and all the goodwill that we have, it is not possible for us to attain to a state of oneness in this country. I am wondering, whether before all of us grow old, it would be possible for us to see in this country a society in which there is only one community, a society in which all differences between caste and sect will cease to exist. But, however, whatever may be the stupendousness of the task, it is the duty of the Government as well as of the Opposition, and of the public, to do whatever is possible in the direction of the upliftment of the Harijan and backward communities in the first instance, and next, leading to a fusion of all communities into one community which knows no differences whatsoever. It is true that as long as a certain section of people are called Harijans as long as there are Harijan hostels and non-Harijan hostels, as long as there are reservation for Harijans, etc., it is not possible to wipe out the difference between Harijan and non-Harijan. I agree it is not possible to wipe out the difference. But all the same, we are faced with a situation wherein a large

4-10 p.m.

[Sri T. Viswanatham] [24th July 1952

section of our people are steped in misery, in poverty and in utter practical helplessness, owing to certain social encrustments formed for centuries. I say Mahatma Gandhi was perfectly right in classifying all these communities under one term 'Harijans', notwithstanding that it is a communal name and notwithstanding that it is communal in its content. However there will come a time when it will be possible for us to realise what Mahatma Gandhi visualised, when you, I, and everyone here, will see only one community and when we will see that no community is thriving on the misery of another particular community. So, Sir, Gandhiji did nothing wrong in separating the Harijan community for special treatment. I know there is a section of opinion growing stronger both in Congress and in non-Congress circles that these outward differences should be wiped out. Is it possible? I wish it were possible. But, as it is, if you have followed, Sir, as we have followed, the speeches, the Harijan members have made in this debate, you would have observed, as some critics had observed, that all of them in one voice had said that the Harijans as a community were not getting as much as they deserved in this Independent Sovereign Republic of ours! Therefore, it is time, without philosophising over all these matters that Government take all the measures which lie within their power to ameliorate their condition. When Mr. Prakasam was the Chief Minister, you may remember, Sir, he created a fund for Harijan Uplift and Village Reconstruction. He created a fund of Rs. 1 crore for the uplift of Harijans and set apart another two crores of rupees for village reconstruction, which in its turn, would also ameliorate the condition of the Harijans. This fund if it had been properly worked would have in a great measure helped to improve the condition of the Harijans in all the districts in this State. But the object with which this fund was created was lost sight of later. When the fund was created, it was created with the view that it should be replenished from year to year. But there were political critics in those days who criticised it and said that it was a lump-sum grant which was against orthodox canons of finance, and that we should not have a lump-sum fund for Harijan uplift with the object of replenishing it every year. But the Government changed afterwards and the result was that the funds were not replenished; it had only been indented upon from time to time. Sir, if you look at page 157 of the Budget Memorandum, you will find that in 1949-50 there was reimbursement of Rs. 10 lakhs only to this fund. In 1950-51 the reimbursement was only three thousand rupees. And for the year 1951-52 (it is all preliminary accounts) there is shown a reimbursement of Rs. 31 lakhs. This fund was created to be spent on works for the benefit of the poorer classes and particularly the Harijans. Therefore, Sir, though we started well, although we expected that it will gather momentum as we went on and that the fund for the amelioration of the Harijan classes would increase, our hopes were blasted when the Government changed.

"Now, Sir, out of the total sum of Rs. 1,32,57,700, there is a sum of Rs. 72,61,000, which goes towards Establishment. The

24th July 1952] [Sri T. Viswanatham]

total Demand, although is put at Rs. 74,00,000, the real amount required is Rs. 1,32,57,700. Of this amount, Rs. 72,61,000 goes towards Establishment, Allowances and Charges. That includes Boarding grants and other things. Therefore what goes to the Harijan uplift is only Rs. 58 lakhs out of 132 lakhs odd. Then, again, Sir, out of this, there is a sum of Rs. 18,61,600 which goes for the backward classes. The friends of the backward classes who have already voiced forth their complaint on their behalf have said that the backward classes are more in number than the Harijan classes, and so, they have declared, 'why is it the Government are so miserly in regard to the allotment of grants for the backward classes'. Therefore, Sir, if we deduct this 18 lakhs odd, the net total amount which goes to the Harijan uplift is Rs. 40,60,100. There is no doubt that this amount goes towards scholarships, stipends, clothing, schooling charges, payment of examination fees, compensation to university, secondary and elementary schools, equipment, maintenance of hostels and boarding grants. Again, it is out of this amount, five lakhs of rupees is provided for construction of wells; and another five lakhs is provided for meeting half the cost of acquisition of house-sites.

"Sir, you will realise and hon. Members will realise what a stupendous problem it is to acquire house-sites for all the Harijans. There are 38,000 revenue villages and in every village, it is an undisputed proposition that the Harijans occupy the worst portion of the village. Therefore, Sir, even if we estimate that at least Rs. 5,000 will have to be spent in each village for acquiring house-sites for Harijans, it will cost Rs. 5,000 × 38,000, that is, Rupees 19,00,00,000. You will realise, Sir, what a stupendous figure it is; but, all the same, we have to do something for the acquisition of house-sites, because it is one of the most important problems in regard to Harijan uplift. 4-20 p.m.

"Sir, land comes next. You have heard from both sides of the House complaints of lands which were under the occupation of Harijans being taken away for some reason or other. Of course, several hon. Friends have concentrated on particular cases where Harijans occupying lands for some years have been deprived of their lands, so that certain political sufferers could get those lands. Sir, it is certainly a very sorry state of affairs! Cannot this Government do something? When Member after Member on both sides of the House, nearly fifty to sixty Members, mentioned this subject, it is time for the Government to appoint a Committee to enquire into the whole question. Sir, is it a fact that lands which have been under the occupation of Harijans for more than five, ten, twenty or even thirty years, have been taken away to be allotted to others—they may be rich persons, they may be political sufferers or they may have other lands—or, is it not a fact? I, therefore, suggest, Sir, that a committee should be appointed to go into this question with full authority to cancel any assignments which might have been made in contravention of the rights of the persons who have already been in occupation of the land. It is true, Sir, the Board of Revenue and the Government may

[Sri T. Viswanatham] [24th July 1952

come forward with the proposition that when assignments have been made they cannot be un-made. It might be said that in several cases the Harijans were in occupation of temporarily assigned lands under the Grow More Food Scheme or under other forms of ordinary temporary assignments and therefore there was nothing wrong on the part of the Government to deprive them of these lands and assign them permanently to others. This is all right as a legalistic argument but, when large numbers of people, particularly those who belong to the poorer section which is economically in a very hopeless condition, are affected, this kind of legalism must be put a stop to because we are now entering at this point into the sociological field from the purely legalistic field. Most of these affected people will be Harijans and there may be a few others also. I know also, Sir, that large investments were made in some cases by these persons in the hope that one day the temporary assignment will become permanent, just as some officers when they are appointed temporarily year after year, for instance in the Survey and some other departments, expect to be made permanent in due course. There is nothing wrong in their expectations. Therefore, Sir, if these Harijans, who originally cultivated the lands under temporary occupation or under a temporarily assigned *patta*, had invested some money on these lands, there is nothing wrong on their part, if they had an honest and innocent idea that one day or other they will get the lands permanently assigned to them as a matter of routine, for in this country land is meant for the tiller of the soil, for the man who tills it, produces food from it and enjoys it. It is in this hope that they have invested money on these lands and I see no valid reason why they should be deprived of these lands. When there are thousands of such cases, it is time for the Government to appoint an enquiry committee to go into the matter. Let them not wait for individual cases for there are so many individual cases in so many villages. We should change our existing policy and adopt a new policy to suit altered conditions.

" Provision of house-sites for Harijans not only in villages but also in municipalities is a very important and urgent matter. Sir, I have had occasion to draw the attention of the House on former occasions also to this subject. The condition of the slums as also the housing accommodation of Harijans in municipalities is very, very bad. If the Government have got some money, I do not want them to fritter it away on schemes which are not remunerative. May I therefore suggest to the Government, Sir, that they should take a portion out of whatever remains of the Revenue Reserve Fund and lend, say, five or ten lakhs of rupees to each municipality for the improvement of slums. The municipalities will surely be prepared to pay them the 2½ per cent interest which the Government are now getting. I am not asking for charity from the Government. I am only saying 'Please lend to the municipalities out of your securities.' The Government will be getting their interest and at the same time the municipalities will be able to improve their slums. This will

24th July 1952] [Sri T. Viswanatham]

be one of the greatest benefits which the Harijans can get and there is no reason why the Government should plead financial stringency.

doing this we cannot raise the standard of living of our people. To industrialise the country, provision of cheap electric power is absolutely necessary, and, I might say, is of primary importance. This could be done only by exploiting the water sources. This has been developed only on a small scale up till now though the Electricity Department has been in existence for over 25 years. There are only three hydro-electric power stations and the rest are only thermal stations. Forty-three undertakings are in the hands of the private companies and 33 are in the hands of the local boards. During the past two or three years the Government have taken over only 10 of these though the Acquisition Act was passed in 1949 to nationalise generation of electric power. In the Act the Government have clearly stated that they will take over the private undertakings within a period of five years according to 'administrative and financial' conveniences. These three words are dangerous words.

5-50 p.m. "It is just like the Hon. Ministers' answers to supplementary questions that the matter is under consideration or that the matter is under examination, etc. There will always be administrative and financial difficulties. Even though the Madras Electricity Supply Undertakings (Acquisition) Act was passed in 1949, I fear nationalisation of electricity in this State may not be completed for 15 or 20 years more. Also the Government of India passed the Indian Electricity Act in 1948 which provides for the constitution of Electricity Boards in every State consisting of three to seven members who must be experts in the line. The idea was that generation and distribution of electricity should not be under the control of the Government. Therefore, Sir, even though the Acquisition Act imposes control of electricity generation and distribution by the Government, the Government have not taken over all the private undertakings during the last four years. If an Electricity Board had been constituted under the Indian Electricity Act, it would have acquired all the private undertakings in the State.

"Again, Sir, the Government are constructing many thermal and diesel oil stations. It is a huge waste of money because we are importing machinery from foreign countries. We have been getting on without electricity for the last 2 or 5 centuries and we can pull on for some more time. We have got rivers whose waters can be harnessed, and hydro-electric power produced, and it is not good to waste our money on purchasing oil engines from foreign countries. It is here that real corruption starts, and it is not a question of our officers taking Rs. 100 or Rs. 1,000 or Rs. 10,000, but the money is going to foreign countries which are bent upon seeing that our country does not advance industrially or in any other respect; they don't want our hydro-electric projects to be completed. If we are to construct thermal stations, we have to import machinery from foreign countries, and for that we have to pay money; again coal also is a waste of national property as coal deposits in our country are limited. My submission, Mr. Speaker, Sir, is the earlier the Government take up the electricity projects the better, and with electricity we can start new industries and

24th July 1952] [Sri S. S. Kolkebail]

increase our national wealth. This can be done by harnessing the waters of our rivers especially on the West Coast and millions of kilowatts of hydro-electric power can be generated . . ."

MR. SPEAKER:—"The hon. Member's time is up. I fix three hours for this Demand. The hon. Minister will reply to-morrow. The cut motion is—

'That the allotment of Rs. 3,18,35,000 under Demand XXVIII—Electricity, be reduced by Rs. 100.'"

SRI K. T. KOSALRAM:—"இந்த மின்சார இலாகா மான்யத்தை ஆதரித்துப் பேசும்பொழுது இந்த இலாகா நிர்வாக மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு சில விஷயங்களைக்கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. மாஜி நிதி மந்திரி நண்பர் ஸ்ரீ கோபால ரெட்டி அவர்கள் சென்ற சட்டசபையில் வரி போடும் சந்தர்ப்பத்தில் வருமான வரியை அவர் காமதேனு என்று சொன்னார். அப்பொழுது நான் சொன்னேன். இந்த அரசாங்கம் காமதேனு என்று எதையாவது சொல்லவேண்டுமென்றால் மின்சாரத்தைத் தான் காமதேனு என்று சொல்ல வேண்டுமென்பதாக. எதற்காக அப்படிச் சொன்னேன் என்றால், இந்த நாடு வளம்பெற வேண்டுமானால், இந்த நாட்டின் கைத்தொழில்கள் வளம்பெற வேண்டுமானால் அது மின்சாரம் ஒன்றினால் தான் முடியும் என்பதற்காகத் தான். அத்தகைய மின்சாரத்தை இந்த நாட்டுக்கு உபயோகப்படும்படி செய்வதற்கு இந்த அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்தாகவேண்டும். அதைச் செய்யாமல் விட்டிருக்கிறார்கள் என்பதை மின்சார இலாகா கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக கொண்டு வருவதற்கும், துரதிர்ஷ்டவசமாக நமது மதிப்பிற்குரிய முதன் மந்திரி கனம் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் நான் பேசுகின்றேன்.

"இந்த மின்சாரத்திற்காக இப்பொழுது 8 கோடி ரூபாய்கள் மான்யம் கோரியிருக்கிறீர்கள். முன்பு நான் சொல்லியிருக்கிறது போல் இன்னும் எவ்வளவு மான்யம் வேண்டுமானாலும் கோருங்கள். பணம் இல்லையென்றால் வரி வேண்டுமானாலும் புதியதாகப் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் நாட்டுக்குச் செய்யவேண்டிய நலீன காலதாமதமின்றி செய்யுங்கள் என்று மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். முன்பு இருந்த மின்சார இலாகா மந்திரி அவர்கள் கிராமம் கிராமமாகச் சுற்றுப்பிரயாணம் போகும்பொழுது எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதியை இன்னும் ஒரு வருஷத்தில் செய்து தருகிறேன், இரண்டு வருஷத்தில் செய்து தருகிறேன், என்று மக்களுக்கு உறுதி மொழியைக் கொடுத்தார்கள். அதே போலவே மின்சார இலாகா அதிகாரிகளும்கூட ஆங்காங்குள்ள கிராமங்களுக்குச் சென்று எல்லா கிராமத்திற்கும், எல்லா விவசாயிகளுக்கும் மின்சார வசதியைச் செய்து கொடுப்பதாக வாக்களித்தார்கள். மதுரை ஜில்லாவில் இருக்கிற எலெக்ட்ரிகல் சூப்பிரண்டு அவர்கள் ஸ்ரீ வைகுண்டம், சாத்தான்குளம் போன்ற எல்லா இடங்களுக்கும், அதாவது, சுமார் 20 மைல்கள் வரை எடுத்துக் கொண்டு எல்லா இடங்களுக்கும் உடனடியாக மின்சார வசதி செய்து கொடுப்பதாகச் சொல்லி வந்தார்கள். அதேபோல எல்லா இடங்களுக்கும் கம்பி இழுத்து வைத்திருக்கிறார்கள். மேலும் சுமார் 40 ஆயிரம் ரூபாய்களுக்கு மேல் பணம் செலவிட்டிருக்கிறார்கள், எல்லா சிப்பந்திகளுக்கும் சம்பளம் கொடுப்பதற்காக மட்டும். கோயமுத்தூரிலிருந்து லயன்இழுத்து பாளையங்கோட்டைக்குக் கொண்டு போவதற்காக தொடர்ந்து நடை பெற்று வந்த வேலைகளையெல்லாம் அரசாங்கம் நிறுத்தி விட்டது. அரசாங்க அதிகாரிகளுக்கு உடனடியாக அந்த வேலையை நிறுத்தச் சொல்லி உத்திரவு அனுப்பிவிட்டார்கள். சட்டசபையில் அந்தத் தொகுதியிலிருந்து வந்திருக்கிற பிரதிநிதிகள் அங்கேயுள்ள பொதுமக்களுக்கு என்ன பதில் சொல்வார்கள் என்று நான் கேட்கிறேன். 'நம்முடைய மதிப்பிற்குரிய கனம் ராஜாஜி

அவர்கள் தலைவராக வந்திருக்கிறார், அவருடைய அரசாங்கம் பதவிக்கு வந்திருக்கிறது. ஆகையால் எல்லா காரியங்களும் உடனடியாக நடத்தப் படும்', என்று நம் பேரில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிற மக்களுக்கு என்ன பதில் சொல்வது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

6 p.m. "இப்பொழுது ஒன்றைச் சொல்லுகிறேன். புதிய கார்ப்பரேஷனை எடுத்துக்கொள்வதற்காக இப்பொழுது பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்குக் கொடுக்கவேண்டிய பணத்தை உடனே கொடுக்கவேண்டியது அவசியமில்லை. அந்தப் பணத்தை கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்காகச் செலவழியுங்கள். அதற்காக இப்பொழுது 50 லக்ஷம் ரூபாய்கள் இருக்கிறது. அந்தப் பணத்தை எடுத்து செலவழியுங்கள் என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். பணம் இல்லையென்பதற்காக எந்த திட்டத்தையும் கைவிடவேண்டாம். பணத்திற்கு வரி போட்டாலும் ஒரு சிலர் எதிர்த்தால்கூட பெரும்பாலான மக்கள் நீங்கள் நன்மை செய்வதாக இருந்தால் எந்த வரிப்பணத்தையும் கொடுப்பதற்குத் தயங்க மாட்டார்கள்.

"மின்சார இலாகா எங்கள் ஜில்லாவில் மட்டுமல்ல, சாத்தன் குளம், முதலிய இடங்களில் நிலங்களுக்கு தண்ணீர். இறைக்கக்கூடிய விவசாயி களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சொன்னார்களே தவிர காரியத்தில் அதைக் காட்டுவதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்யப்படவில்லை. கோவில்பட்டி தாலுகா ஒரு பஞ்சப் பிரதேசம். சங்கரன்கோவில் பிரதேசமும் மிகமிக பஞ்சப் பிரதேசம். அந்த ஊர்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொல்லி வேலையும் நடந்து வந்தது. அந்த இடங்களைச் சுற்றியுள்ள எல்லாப் பிரதேசமும் பஞ்சப் பிரதேசம் தான். மின்சாரம் வந்தாலாவது அது செழிப்புள்ள தொழில்வளமுள்ள பிரதேசமாக மாறுதா என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை நடந்து கொண்டிருந்த பொழுது இந்த வருடம் மின்சாரம் வந்துவிடும். அடுத்த வருடம் வந்துவிடுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இப்பொழுது என்னவென்றால் அந்த வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டுவிட்டதாக அறிகிறேன். இந்த ஊரில் மாத்திரம் அப்படி நிறுத்திவிட்டார்களோ என்று எண்ணினேன். மதுரையி லிருந்து வந்த நண்பர் ஒருவரும் சொன்னார். அந்தப் பிரதேசத்திலும் இப்படித்தான் நடந்து கொண்டிருந்த வேலைகளையெல்லாம் நிறுத்தி விட்டார்கள் என்பதாக. இது நியாயமாகாது. ஆகையால் சர்க்கார் உடனே இதில் கவனம் செலுத்தி எந்தந்தப் பிரதேசத்தில் ஆயிரம் ரூபாய்கள் வரை செலவு செய்திருந்தாலும்கூட அந்தப் பிரதேசங்களில் உடனே வேலையை தொடர்ந்து நடத்தி மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியை பூர்த்தி செய்யவேண்டுமென்பதாக நான் கேட்டுக் கொள்ளு கிறேன். எங்கு பார்த்தாலும் இப்பொழுது கைவிடல் படலமாக இருந்து கொண்டிருப்பதால் நாங்கள் எப்படி பொது மக்கள் மத்தியில் போய் பேசுவது என்றே தெரியவில்லை. நீங்களும் பொது மக்களின் அன்பை எப்பொழுதும் பெற்றுக் கொண்டிருக்கவேண்டுமானால் உடனே இந்த வேலைகளைச் செய்ய முயற்சிக்கவேண்டும். இன்னும் 8 கோடி ரூபாய்கள் வேண்டுமானாலும் இந்த மின்சார இலாகாவுக்காக எடுத்துக் கொள்ளுங்கள். பணமில்லையென்று சொல்லி மாத்திரம் எந்தத் திட்டத்தையும் கைவிடக் கூடாது. இங்கே வந்திருக்கிற Finance Commission இடம் நீங்கள் சண்டை போட்டாவது சென்னை ராஜ்யத்துக்கு அதிகமாக பணம் ஒதுக்கவேண்டு மென்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு முன்பு இருந்த மந்திரிகள் சென்னை ராஜ்யத்திற்கு வேண்டியவைகளையெல்லாம் மத்திய சர்க்காருடன் சண்டை போட்டு வாங்குவதற்கு முடியாத நிலைமையில் இருந்தார்கள். ஆனால் நமது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் பதவியை ஏற்றுக்கொண்ட வுடனேயே சில காரியங்களில் மத்திய சர்க்காருடன் சண்டை போட்டு அவர்களை சம்மதிக்க வைத்திருக்கிறார்கள். அவர் பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுதும்கூட சில இடங்களில் 'சென்னை அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் இப்போது எதை எதை செய்யவில்லை', என்பதாகவெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ராஜாஜி என்ன சொன்னார்களோ அதை தைர்யமாக சண்டை போட்டாவது சாதித்துக் கொள்ளவேண்டுமென்பதாக நான் கேட்டுக்

கொள்ளுகிறேன். அவர் நினைத்தால் கட்டாயம் சாதித்துக் கொள்ள முடியும். நீங்கள் இப்பொழுது பணத்தைச் செலவிட்டு சப்ளிமெண்டரி கிராண்டில் வேண்டுமானாலும் இந்தத் தொகையை சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் இவைகளை நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் பொது மக்களிடம் பதில் சொல்ல முடியாது.

"இவைகளோடு இன்னும் அதிக தர்மால் ஸ்டேஷன்கள் அமைக்க வேண்டும். நாங்குநேரியில் ஒரு பெரிய திட்டத்தை நிறுத்திவிட்டாகள். சேர்வலார் என்று ஒரு ஆறு. மின்சாரத்திற்காக ஒரு தேக்கம் கட்டி அதிலிருந்து மினசாரம உற்பத்தி பண்ண ஏற்பாடு செய்தார்கள். சேர்வலார் ஸ்கீமையும் இபபொழுது கைவிடல்படத்தில் சேர்த்து கைவிட்டுவிட்டாகள். சர்க்கார் போட்ட திட்டத்தை எந்தக் காரணம் கொண்டும் நிறுத்தாது அதைச் செய்தே தீரவேண்டும். அப்படிச் செய்தால் தமிழ்நாட்டிலுள்ளவர்கள் என் இம்மாகாணத்திலுள்ள 5½ கோடி மக்களும் சந்தோஷபடுவார்கள். கனம் ராஜாஜி மிகவும் திறமை வாய்ந்தவர். சென்ற மந்திரி சபை செய்யத்தவறிய பல காரியங்களை இப்பொழுது இவர் செய்திருக்கிறார். இருந்தாலும அவர்கள் செய்துவந்த பல நல்ல காரியங்களை ஜே.சி. கைவிட்டுவிட்டதால் தான் பெருமையை பூர்ணமாக அடையமுடியவில்லை. ஆகையால் எந்தக் காரியத்தையும் நிறுத்தாமல் செய்யவேண்டுமென்ப தாகக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

* Sri D. K. RAJU:—"Mr. Speaker, Sir, while supporting the cut motion, I desire to offer some useful remarks about the agricultural side under the head 'Electricity'. The Electricity Department no doubt is the foremost item in the nation-building programme of the country on modern lines. So much so in our State of Mardas, many crores of rupees have been freely spent on this account. I was very closely connected with this department, Mr. Speaker, Sir, since 1935 and I know something of the working of the department. In this connexion I cannot but refer to the good work done by Sir Henry Howard in executing many useful schemes in the State. He is responsible for having brought the Electricity Department to the stage at which it now is.

"Now, our Madras State is ileading in electricity. No doubt, Sir, the Electricity Department is a commercial department. Therefore it is all the more necessary that its outlook should not be like that of a 'bania'. Simply because it is an essential department, the Government should not exploit the people, using the department as a medium to collect more revenue by charging increased rate for every unit of electricity supplied. The report of the Electricity Department shows that they have earned nearly two crores of rupees last year. When such is the case, I ask the Honourable House what is the necessity for the surcharge that is now levied? In the rural areas too, for all agricultural extensions, the Government levy a surcharge for the electricity supplied. If they are serious in helping the poor agriculturist, they ought to sell electricity at a cheaper rate. For every unit supplied to the consumers, I do not find any reason for the Government levying any surcharge. It is said on behalf of the Government that due to the high cost of overhead transmission materials and increased cost of maintenance, they are compelled to levy the surcharge. If the Government are really interested in the development of electricity in our State, I think it is high time they do away with this surcharge.

[Sri D. K. Raju] [24th July 1952

" Of late, I find the expenditure has risen very high in the Electricity Department. No doubt, in recent years the department has expanded considerably. Anyhow I request the Government to reduce the expenditure in the Electricity Department, at the same time taking care that efficiency is not in anyway impaired. They should try to bring down the expenditure to the minimum.

" I shall now come to the extension of electricity supply to agriculture. While moving his Demand, the Hon. Minister in charge of Electricity said that the Government were very keen on giving agricultural extensions. The department scrutinises every application while sanctioning any agricultural extension. These extensions are intended only for agricultural purposes. Now,
6-10 p.m. even though an extension is intended exclusively for agricultural purposes, the revenue therefrom is scrutinised and there is a special minimum guarantee fixed for all the agriculturists. I think this is a burden on agriculture. If the Government are really sincere in safeguarding the interests of agriculture, they must not have this special minimum guarantee based on annual consumption.

" In this connexion, I would like to say that in the Srivilliputhur taluk where I happened to be the head of the distribution scheme then, in the case of consumers whose wells had dried up, I waived the minimum guarantee; whereas, after the Government took over the scheme last year, they collected this minimum guarantee though the agriculturist-consumers protested against it. I think Government should take note of this and see that such annual guarantee in the case of consumers, whose wells have dried up on account of failure of monsoon, if already collected, is refunded, and that suitable instructions are issued to the officials in the field not to press for the minimum guarantee in such cases.

" As regards nationalisation, Sir, I am not at all opposed to the principle of nationalisation. The theory is good to the nation, provided it is handled without personal prejudice or favour. The Government have no policy of their own. It is said that because the private licensees are occupying all urban areas, where they get good revenue, no developments are made by the licensees in the rural areas, and consequently the agriculturists suffer. It is also said that because commercial men are handling the business, rural development has no scope in the State; and that if the Government were to take up all the areas, both remunerative and unremunerative areas will be tackled without any prejudice or discrimination. Now, Sir, if the Government are really sincere in saying that the licensees are not developing the rural areas, do they not see areas well-developed by the licensees, even better-developed than Government areas even though agricultural extensions are being scrutinised individually? This individual scrutiny must be put an end to at an early date. It is also said that the entire area will have uniform development irrespective of the revenue returns, in case all the areas are taken over; but even after taking over some of the licensees' areas, the Government are doing

24th July 1952] [Sri D. K. Raju]

the very thing which the licensees were said to be doing. In some areas, even though electricity is very badly needed by the agriculturists, the Government do not extend the lines on the ground that such extension will not be remunerative. It was stated that only the areas, where the period of licence given to the licensee had expired, would be taken over in the beginning. But may I ask the Government whether they can disclose the reason why the areas of some of the licensees, whose period of licence had already expired, are still left over, while the licences of those licensees whose period still continues, have been taken away? I request Government to disclose their policy underlying the taking over of licensees' areas, leaving out even cases where notice of termination had been already served.

" As regards compensation, when the licensee's area is taken over, the payment of compensation is being delayed unnecessarily. A lot of red-tapism is being observed without any reference to the reaction on the licensee, who has handed over the undertaking. Take, for instance, the West Ramnad Electric Distribution Company, Ltd., in which I am interested. Nearly a year has elapsed; still not a pie has been given. I would like to draw the attention of the Treasury Benches to the fact that from the moment the Government took over the undertaking, they are getting the benefit of the revenue. Yet, there is no provision to pay the interest from the date of taking over. The Act says that interest will be given for some small sum which may be left over after the first payment is made. That is sheer injustice. When the Government are getting the entire benefit of the undertaking developed by a licensee for a long time, from the very moment when they stepped in, there is no reason why they should not pay up the interest to the shareholders. After all, this interest goes only to the shareholders. While enacting the Acquisition Act, the Government stated that they were intent upon safeguarding the interests of the shareholders as against the managing agents. Now, Sir, I do not plead for the managing agents; I only plead in the interests of the shareholders. If the payment of the interest is delayed any further, the shareholders who were getting an average of six per cent will be deprived of one year's profit. I request the Treasury Benches to note down this subject for their examination.

" Then again, the Electricity Department in general is so essential that the Government should treat it in quite a different manner from the other departments; that is, they must always try to bring down the cost of electricity to the poor consumer. I heard a rumour recently that taking advantage of the present situation, they even want to increase the surcharge that is now collected. You will be pleased to note, Sir, that of all the Government departments, the Electricity Department is the one in which there was no red-tapism and it was very efficient all along. But now, perhaps on account of its enlargement, due to the expansion of its activities, I am sorry to say that red-tapism is stealthily entering into it. I request the Hon. Minister—I see also the Chief Engineer is present here—to just make a note of this and see that red-tapism is eliminated at an early date."

6-20 p.m. * SRI PADMAPRABHA GOUNDER:—" Mr. Speaker, Sir, it is stated on page 2, paragraph 5 of the Budget Memorandum presented by the Hon. the Minister for Finance that the capital outlay on electricity schemes in the year 1950–51 amounted to Rs. 737 lakhs showing an increase of Rs. 37 lakhs over the revised estimate of Rs. 700 lakhs. In the same Memorandum, on page 112, we see that the accounts for 1950-51 shows Rs. 737·45 lakhs while the Budget estimate for 1951–52 shows Rs. 937;31 lakhs; the preliminary account for 1951-52 shows Rs. 752.48 lakhs and the Budget estimate for 1952-53 is Rs. 800 lakhs. In 1951-52 though the Budget estimate was Rs. 937.31 lakhs the actual money spent was Rs. 752.48 lakhs. Taking the income from these schemes, there is an increase from Rs. 378 lakhs in 1950-51 to Rs. 468 lakhs in 1951-52. The increase in the income between those two years is Rs. 90 lakhs. The present Budget provision of Rs. 800 lakhs is not at all encouraging for the future development of the schemes. Taking the amounts spent upon electricity schemes from the year 1946 to 1952 inclusive it is about Rs. 2,976.46 lakhs and the amounts now demanded is Rs. 800 lakhs which gives a total figure of Rs. 3,776·46 lakhs and it is not known what percentage is or is going to be spent on rural and urban areas. Coming to Malabar and South Kanara districts, the attitude of the State Government deserves the greatest condmnation. I should like to know from the Hon. the Minister for Public Works what actually is spent on those two districts. According to the Planning Commission's recommendations in the Five-Year Plan, the Government have to undertake eleven projects which are in various stages of progress. It is well and good, but can Malabar expect anything from this? None of these schemes is in Malabar, nor do I believe Malabar is going to profit from any of these schemes. Perhaps not. From past experience Malabar has learnt enough, and how can people believe that Government will do justice to Malabar? It is well to remember that half the area of Malabar is unfit for human habitation and cultivation and we should therefore come to the conclusion, on a mathematical and logical basis, that the effective density of the population of Malabar per square miles is 1,600 and not 800. What are the facilities that are afforded by the Government to the people either in the matter of industry or agriculture? In the absence of irrigation facilities, the people should naturally depend upon industries for which power is required, but unfortunately this has been denied by the Government. In modern days, oil and power have become the dominant factor in human life because both influence social and economic relationship of men. I am sorry to observe that the Government have failed to take note of these, and Malabar has not been benefited by these schemes. What is the result? People have no means of livelihood, and naturally Malabar has become the plague-spot in the State. There is ample scope for developing the village industries, if only electric power is supplied to those areas. I like to take this opportunity to request the Government to be more kind and liberal towards Malabar at least now. Coming to my own constituency of Wynaad, it is nearest to Pykara and

Moyar, and it is over that part of Malabar, i.e., Wynaad, that the high tension wires are taken to supply power to three distant towns like Calicut, Cannanore and Tellicherry. Is it not their duty to supply power to the places situated nearer to the generating centres than remote parts in the State which must cost more to the Government? According to Government, Wynaad is considered to be a backward area. So, it is the duty of the Government to raise the socio-economic condition of the backward people. Wynaad has been neglected, not to speak of the whole of Malabar.

" There is plenty of timber available in Malabar which could feed village industries if organized through co-operative efforts. Village industries could be built up and furniture, doors and windows could be manufactured and sold through co-operative organizations. I am sorry to say that where finished articles could be manufactured and exported from the State, raw materials go out and arrive back here in finished condition. What is it due to? It is all due to want of power. For starting industries, you want power and if this is available, it would minimize unemployment, operate as a salve to political unrest in the district, and also promote the economic, moral and material well-being of the people. I would like to repeat, in this connection that the Government have done the greatest injustice to the people of Malabar, particularly the people of Wynaad and other taluks as far as supply of electricity is concerned. I can boldly say that the Government derive a good amount of revenue from these taluks, and if an extension of the supply is made to these taluks, better income can be expected from these regions. In certain parts of the district, the supply of power can give ample scope for the utilization of pump sets in the absence of provision of Government irrigation facilities. In this case also the Government have completely neglected Malabar. Above all, the supply of power to Wynaad would enable the starting of new industries like paper manufacture from bamboo pulp and saw mills, so that we can supply sleepers for the use of our railways. It is better to decentralize industries by the proper distribution of electric power. I should like to take this opportunity to tell the Government that the Department of Electricity is the biggest purchaser of materials and it is not known whether in effecting purchases preference is being given to articles manufactured in India. It will be good if the Government announce what their policy in this matter is. The Government also announced their decision to nationalize electricity undertakings run by municipalities and private enterprise like the West Coast Electric Supply Corporation. While I welcome nationalization, I feel that it is absolutely essential that local bodies should be equitably compensated for the loss of their income without which it will not be possible for them to run their services with efficiency. I hope and trust that the Government would give due consideration to the peculiar conditions of Malabar, which I have explained, and do something to the poverty-stricken people of Malabar."

[24th July 1952

6-30 p.m. * SRI P. B. K. RAJACHIDAMBARAM:—" Mr. Speaker, Sir, in supporting the cut motion, I want to lay emphasise on only one point, viz., the nationalization policy of the Government regarding the electricity undertakings in the Madras State. I must state here that the policy adopted by the Government now is a dog in the manger policy. Neither they go on with the policy of nationalization and take over the electricity undertakings nor do they allow the existing electricity undertakings to go on with their work.

" The effect of the Madras Electricity Undertakings (Acquisition) Act of 1948 is that any licenced undertaking can be taken over by the Government, by giving 4 months' notice to the licensee,. compensation being determined in accordance with one of the three alternative provisions in that Act.

" At the time the Bill was passed into law, an approximate time-table was indicated by the Minister for Public Works, but the time-table given was only tentative, and the Government had the power to alter the sequence or the period of such taking over. This has created a position of uncertainty, and, though actually the Government have not been able to keep up to their programme of nationalization, development in the licensees' area has been greatly affected, as they (the licensees) have not been able to plan for either finances or for works in the face of an uncertain future. The reasons for this state of affairs are as follows. It is difficult to raise finances either in the form of share capital or in the form of debentures, as there is the uncertainty of tenure of such an investment. Naturally, Sir, the investors would like to be assured of a minimum period of at least 10 years for their investment. Even if moneys are advanced either by the Government by way of loans or by the State Finance Corporation, the licensee will be reluctant to embark on any major programme as it takes at least three years before any scheme begins to pay any interest. Further such loans are advanced on the basis of repayments in instalments commencing from the third year. This involves the licensee in the problem of securing finances from time to time to repay such loans. Procurement of materials, particularly conductors, posts and insulators requires at least two years, as deliveries are protracted. When this is considered in relation to the problem of finance, it will be apparent that unless a long term is assured, the licensee will not be in a position to commit himself to any big projects.

" Sir, the demand for electric power, particularly for agricultural and small industries, is, however, enormous and if there is continued delay in giving service connections it is likely that the enthusiasm of the people wanes. Production will also be seriously affected. So, I would like to suggest to Government to make a clear and definite statement that no licensed undertaking will be taken over, say, before 1965, and at the end of that period, if the licensed undertaking is not taken over, the term will be extended, as provided in the Electricity Act, by seven years. In [illegible] of such a declaration, the licensee will not normally

24th July 1952] [Sri P. B. K. Rajachidambaram]

require finance from the Government. If, however, the Government desire to continue the policy of advancing loans for rural development, such loans should be advanced in the form of mortgage debentures repayable at the time of taking over, as charge on the compensation amount, interest alone being paid by the licensee yearly, beginning with the third year of advance of such loans. The licences, particularly in Tamilnad, generally cover large mixed rural and urban areas. Hence development in these areas can be ensured. There are, no doubt, a few small licensees in Tamilnad dealing mostly with urban loads. The merger of these with the bigger licensees could be negotiated for purposes of rationalization. The licensees are governed by the stringent provisions of the Electricity Supply Act as regards limits on profits.

" Sir, it is possible for the State Government to further discuss with the licensees and agree on economic consumer tariffs which, after all, are the main provisions to be secured. The Government may also agree on various other factors like capitalization of charges, optimum revenue expenditure, etc. Such an agreement would ensure to the State Government that there is no exploitation or overcapitalization and also ensure a programmed development of the area and a reasonable and economic tariff to the consumer.

" The State Government's Electricity Department has a full job on hand in increasing the State's power resources, and in constructing transmission lines and sub-stations necessary for the distribution of power on a State-wide scale. At present the developed power resources are inadequate to meet the growing demands for electric power. Nor is the transmission system adequate to convey sufficient quantities of power to various points for distribution. So, Sir, I suggest that the Department concentrates fully on these two important aspects of electrification of the State, entrusting to regional agencies, either private supply companies or municipal agencies the power distribution to consumers reserving full supervisory control on finances and technical details to the Chief Electrical Inspector."

* SRI K. S. ARDHANARESWARA GOUNDER :—" கனம் தலைவர் அவர்களே, மாமத்து மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை, விவசாயி என்ற ஹோதாவில், தான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். ஆனால், சில குறைப்பாடுகளையும் இங்கு நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

" சர்க்கார் ஒவ்வொரு திட்டத்தையும் வகுத்துவிடுகிறார்களே தவிர, விவசாயிகளுக்கு சரியான முறையில் அந்தத் திட்டம் பயன்படுகிறதா என்று பார்க்கும்போது, 100-க்கு 20 பங்கு பலனைத்தான் அடைகிறார்களே தவிர, முழுப் பலனையும் அடையவில்லையென்பதை சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

" பொதுவாக எடுத்துக்கொண்டால், விவசாயிகளுக்கு இரவு நேரங்களில் தான் மின்சார சப்ளை செய்யப்பட்டு, தண்ணீர் இறைத்துக்கொள்ளவேண்டு மென்று சொல்லப்படுகிறது. ஆனால், நல்ல விவசாயம் தெரிந்த ஒரு நல்ல இன் ஜினீராக இருந்தால், விவசாயக் காரியங்களுக்கு இரவு நேரங்களில் மின் சாரம் சப்ளை செய்தால் அவன் தன்னுடைய பயிர்களுக்கு, சோளக் கட் டுக்கும், கேழ்வரகு கொல்லைக்கும் இரவில் போய் தண்ணீர்ப் பாய்ச்சுவது எவ்வளவு கடினமாகவிருக்குமென்பது தெரிந்திருக்கும். அப்படித் தெரிந் திருந்தால், இரவு நேரத்தில் விவசாயத்திற்கு மின்சார சப்ளை கொடுப்

பதைக் கவனிப்பார்கள். ஆனால், சர்க்கார் ஏதோ விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய, மின்சார சப்ளையில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன, இரவில் சப்ளை கொடுத்தால் விவசாயிகளுக்குப் பயனுண்டா? இல்லையா? என்பதைப் பார்ப்பதில்லை. விவசாயத்திற்கு பகலில் சப்ளை செய்யாமல், மில் முதலாளிகளுக்கு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மின்சார சப்ளை செய்யத் தயாராயிருக்கிறார்கள். இதை அந்த விவசாயிகள் கவனிக்காமலில்லை.

"முக்கியமாக 1930-வது வருஷத்தில், சர்க்காரில் மின்சாரத்திற்கு canvassing department என்று இருந்தது. அதற்காக அதிக பணத்தைச் செல்வு செய்து கொண்டிருந்தார்கள். விவசாயிகளிடத்தில் போய் அதிகாரிகள் கேட்டால், "எலெக்ட்ரிக் பம்பு செட்டுகள் வைத்தால் தண்ணீர் சூடு அடைந்துவிடும், எங்களுக்கு வேண்டியதில்லை" என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருந்தார்கள். இப்பொழுது ஒவ்வொரு விவசாயியும் 1,200 ரூபாய் வரையில் கொடுத்து ஒரு ஜோடி மாடு வாங்கவேண்டியிருப்பதனால் 5 H.P. பம்ப் செட் வைத்தால் 3 கவலை தண்ணீர் இறைக்கின்றது. அந்த 3 கவலை தண்ணீர் இரயம் போட்டால் ஒரு ஜதை எர் மாட்டின் வேலையாகிறது. மின்சார இயந்திரத்தை வாங்கி இயக்கும்படியான நிலைமையில் விவசாயிகள் இல்லை. சர்க்கார் உணவு உற்பத்தித் திட்டத்தை வகுத்திருக்கிறார்களே தவிர, அதற்குத் தகுந்த கருவிகளையும் சாதனங்களையும் கொடுப்பதில்லையென்பதை சர்க்காரின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகின்றேன்.

"ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை ஒவ்வொரு விவசாயியிடமும் தகுந்த பணம் மீதம் எற்படும்போது, தங்களுடைய இணற்றை ஆழப்படுத்தவேண்டுமென்று நினைப்பான். அந்த சமயத்தில், எலெக்ட்ரிக் டிபார்ட்மெண்டார், இரவு நேரங்களில்தான் மின்சாரம் சப்ளை செய்யப்படும், பகலில் இல்லை என்று சொல்வார்களானால், சேமித்துவைத்திருக்கும் சொற்ப தொகையையும் வேறு வழியில் செலவழித்துவிட்டு, கிணற்றை ஆழப்படுத்தும் படியான நிலைமையில் இல்லாமலிருக்கின்றான். ஆகையால், சர்க்கார் உடனடியாக மின்சாரத்தை ஒவ்வொரு விவசாயிக்கும் பகல் நேரங்களில் எப்பொழுது வேண்டுமானாலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"அதாவது, மின்சாரத்தை சேலம் ஜில்லாவில் மேட்டூரில்தான் தயார் செய்கிறார்கள். ஆனால், கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைப்பதற்கு இன்னும் மின்சார சப்ளை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். மேட்டூர் அணைக்கு அருகில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் தான் பாய்ச்சிக்கொள்வதற்கு சௌகரியம் இல்லையென்றால், இந்த மின்சாரத் திட்டத்தையாவது பூரா ஜில்லாவிற்கும் உடனடியாக விஸ்தரித்தால், சேலம் ஜில்லா வாசிகளுக்கு விவசாய உபயோகத்திற்குத் தகுந்த வசதி கிடைக்குமென்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும். நேரம் முடிந்து விட்டது என்பதற்கு அடையாளமாக (கனம் ஸ்பீகர் அவர்களால் மணி அடிக்கப்பட்டது.)

"விவசாயி என்ற முறையில் விவசாய காரியத்தில் எனக்குப் பேச சந்தர்ப்பம் இருக்குமோ, இல்லையோ என்ற காரணத்தையொட்டி, இன்னும் சில வார்த்தைகள் பேசுவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

6-40 p.m. "சேலம் ஜில்லாவில் விவசாய டிபார்ட்மெண்டார், அதிக தான்ய உற்பத்தி செய்பவர்களுக்கு "ப்ரைஸ்" கொடுப்பதென்று வைத்திருந்தார்கள். தாத்தம்பட்டியில் ஸ்ரீமான் வெள்ளைய கவுண்டர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் பவுண்டு நெல் எடுத்தார் என்று சொல்லப்பட்டு எல்லாரிடத்தும் பெற்றுவிட்டார். விவசாய டிபார்ட்மெண்டில் இருக்கக் கூடிய டெமான்ஸ்ட்ரேடர் முதற்கொண்டு விவசாய டைரக்டர் வரை அதைச் சரியாகக் கவனித்து அந்த ப்ரைஸ்களைக் கொடுக்கவில்லையென்று சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

"அதாவது தண்ணுடைய 2 ஏக்கர் 25 செண்டுக்கும், 500 ஆடுகள் கொண்டபட்டி, 2 மாதத்திற்கு அந்த நிலத்தில் விடப்பட்டு, 30 வண்டி புன்னாத்தழையும், 45 டன் கம்போஸ்டு உரமும் 15 டன் மனித கம்போஸ்ட்

உரமும், 12 மூட்டை புண்ணாக்கும், 5 மூட்டை எலும்புத்தூளும், 450 ராத்தல் அமோனியம் ஸல்பேட்டும் போட்டு 12 ஆயிரம் பவுண்டு எடுத்ததாகச் சொல்லி, அவருக்கு 'ப்ரைஸ்' கொடுக்கப்பட்டது. விவசாய டிபார்ட்மெண்டார் அதை பரிசிலீனை செய்யாமல் ஒத்துக்கொண்டு அவருக்கு "திருஷ்டி" பட்டம் கொடுத்திருக்கிறார்கள். விவசாய டிபார்ட்மெண்டில் இருக்கிறவர்கள் நன்றாக யோசனைசெய்து அவ்வளவு எரு கொடுத்து 12 ஆயிரம் ராத்தலா அல்லது எவ்வளவு விளையும், என்று பார்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், அதை விட்டுவிட்டு எதிர்க் கட்சியில் இருக்கக் கூடிய நண்பர்கள் தேர்தல்காலத்தில் நபர் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலமும் பசு மாடும் கொடுக்கிறோமென்று சொல்லியது போலத் தான் சர்க்கார் இதைச் செய்துகொண்டுவருகிறதே தவிர, மறுபடியும் சர்க்கார் தீவிரமாக, நன்றாகப் பரிசீலனை செய்து அந்த டிபார்ட்மெண்டில் யார் இருக்கின்றார்களோ அவர்களுடைய தவறை சரியான முறையில் விசாரிக்காவிட்டால், நம் நாட்டையே ஒரு மனிதன் எமாற்றக்கூடிய நிலையில் இருக்கிறார் என்பதைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஆகையால், சர்க்கார் தீவிரமாக மறுபடியும் பரிசீலனை செய்து 12 ஆயிரம் ராத்தல் எடுக்க முடியுமா? அது என்ன மந்திரமா? உண்மையாகவே செய்யக்கூடிய காரியமா? என்பதையெல்லாம் கவனித்துச் செய்யாவிட்டால், சர்க்காரை எதிர்க்கட்சியார் குறைகூறுவதற்கு இடங்கொடுத்தது போலாகும், என்று சொல்ல விரும்புகிறேன்.

"மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் மில்லில் அநேக தொழிலாளிகள் வேலை செய்கின்றார்கள், ஜனவரி முதல் ஜூலை வரையில் அவர்களுக்குச் சரியான படி பூரா நேரமும் வேலைகிடைப்பதில்லை. காரணம் "எலெக்ட்ரிக் கரண்ட் பூரா நேரமும் சப்ளை செய்யாததால் வருஷந்தோறும் 4 மாதங்களுக்கு வேலையில்லாமல் இருக்கிறது. வாரத்திற்கு 3 நாட்களுக்கு வேலையில்லை, இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டாரிடமிருந்து நல்ல வருமானம் வரும்போது, அவர்கள் தண்ணீர் இல்லாக் காலத்தில், எல்க்ட்ரிசிட்டி cut ஐ நிவர்த்தி செய்து, ஆயில் இன்ஜின் மூலமாவது, அல்லது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டாருக்கு வரக்கூடிய லாபத்திலிருந்தாவது 4 மாத காலத்திற்கு அங்கிருக்கும் தொழிலாளிகளுக்கு எவ்வளவு நஷ்டம் எற்படுகிறதோ, அதைக் கொடுத்து உதவிசெய்யவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"ஒவ்வொரு தாலூகாவிலும் சில எலெக்ட்ரிக் ட்ரில்லிங் ஸெட்கள் வைக்கப்படவேண்டும். சேலம் ஜில்லாவில் ஒவ்வொரு இடமும் பாறையாக இருப்பதனால், கிணற்றை ஆழப்படுத்துவதற்காக, எலெக்ட்ரிக் பவர் ட்ரில்கள் ஒவ்வொரு டெமான்ஸ்ட்ரேடர் ஆபீசிலும், 5 அல்லது 10 ஸெட்கள் வரை தயாராக வைத்திருந்து, தண்ணீர் இல்லாத காலங்களில் மின்சார சப்ளை இருக்கும் இணத்திற்கு வைத்து வெட்டுவதற்கு வசதிசெய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தைப் பூர்ணமாக ஆதரிக்கின்றேன்."

SRI K. V. RAMESAM:—"Mr. Speaker, Sir, it pains me to bring to the notice of the Government the disparity in the capital expenditure of this State in the past on this very important service in regard to the districts north of Madras and those to the south of Madras including Madras City. I find from the figures supplied by the Hon. the Finance Minister that about Rs. 2,025 lakhs odd are spent on the southern districts including Madras City, whereas only a sum of Rs. 8,50,37,000 has been spent in connection with this service on the northern districts (north of Madras) including the Machkund Project. Therefore, Sir, I submit that in future at least they should try to rectify this injustice done to the northern districts, by extending the services as extensively as possible to the areas in the northern districts. This lack of supply of energy accounts for the great difficulties that the people there are now

suffering from. For instance, in the northern districts (I mean Visakhapatnam and Srikakulam districts) the service, which is mostly rendered there by the Visakhapatnam Thermal Station, is entirely inefficient. Most of the villagers there have to depend on rain water for agricutlural purposes, as they do not have the advantage of this electrical energy service. If the Visakhanatnam Thermal station is made to serve the needs of the ryots of the Visakhapatnam and Srikakulam districts adequately, I am sure it would be possible to remove the food deficit in those districts; this is more so in the case of the Visakhapatnam district. For there are no big rivers there. Most of the ryots there grow sugarcane, and this crop is raised depending mainly on well water. For drawing water from the wells they have to depend mainly on the piccottah system, which, we all know, is a very costly process now. So I appeal to Government to make electricity available to the ryots of the two districts who are growing paddy and sugarcane crops, because there are enough wet lands there for growing these crops. I particularly invite the attention of the Government to the fact that there has recently been an extension of electricity service to Chodavaram. Now, all along the way of that extension, there are several villages which can be supplied very easily with this energy. I appeal to the Government to see that it is done.

"I now come to the other taluks which have been given electricity supply. Recently Government were pleased to take up the transmission line to Yellamanchili taluk. Though that announcement was made to the public, it has not yet been implemented. I hear there are at present proposals to extend it to Yellamanchili itself, which is the headquarters of that taluk. In Srikakulam district, there was a proposal to extend the service from Cheepurupalli to Razam. Razam is selected because it is a very important place. The proposal has been there for some time past; the investigation also was taken up and it was found to be remunerative; still, Government have not been pleased to carry out that extension scheme from Cheepurupalli to Razam.

6-50 p.m. "The people have been clamouring for the extension of the service for a long time, and I request that the Government may be pleased to take up those services which have been recommended by the department as very remunerative and which will also be useful, and thus extend the service to these places.

"Sir, I would like next to refer to the nationalization of electricity undertakings in the State. Undoubtedly, it is one of the important services connected with the development and the prosperity of the State. Therefore every step that is necessary should be taken to nationalize all the undertakings in this State irrespective of the cost involved. If funds do not permit, the process of nationalization might be curtailed and all the undertakings may be taken over gradually in the near future.

"Sir, my final submission to the Government is that as the rural aspect is not properly taken into consideration, there is a flow of the rural population to the cities, and the urban people are

not willing to go to the rural areas. If electricity is extended to the rural parts in abundance, the urban people will also be surely tempted to reside in the villages because of the various amenities that could be provided by this service. The rural population also will not be tempted to flow or run to these cities, and thus cause unnecessary problems to civic administrations like the Madras Corporation. I therefore submit, Sir, that the policy of the Government should be to extend the service as soon as possible to these villages so that there may be prosperity in the villages, the rural people may be enabled to grow more food and also become industrially advanced. Prosperity will be in proportion to the extension of this service because civilization is nowadays more or less dependent on this service, and we find that wherever electricity is used, the people are greatly civilized. By the extension of this service, the tendency of the rural population to move themselves out of the villages will be removed. Cottage industries and small-scale industries can be started in these rural areas, and thereby we will be removing the great curse of unempolyment, which has been the bane of the rural folk.

"Sir, I would like to submit finally, that so far as our State is concerned it has got abundant industrial resources, and therefore the hydro-electric systems which have been already started, should be given a great fillip. Unfortunately the Machkund Project, which has been started about three or four years ago has been slowed down. It was promised some time back that even in 1952 the people of this area will be having the benefits of this scheme. As a measure of retrenchment, the progress of this scheme has been slowed down and the scheme has not fructified, and we have not had the advantage of it. I think, Sir, that the Government would hold out the hope that at least in the near future the people in this part of the State will be having the benefits of the Machkund Scheme."

*SRI S. RAMALINGAM :—"Mr. Speaker, Sir, மின்சார மான்யத் திற்குக் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் பேச விரும்புகிறேன். சர்க்கார் மின்சார நிலயங்களை எடுத்து நடத்தும் கொள் கையைக் கண்டித்து பேசவேண்டிய நிலைமையிலிருக்கிறேன். அதாவது ஸ்தல ஸ்தாபனங்களும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் நடத்தும் மின்சார உற் பத்தி நிலயங்களை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று திட்டமிட் டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமையில் மின்சாரத்தை நாடு பூராவும் அதிகப்படுத்தவேண்டும் இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கொள்கைக்கு இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் கொள்கை இடையூராக இருக்கிறது. எனென்றால் அவைகளை யெல்லாம் தேசியமயமாக்கி சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போகிறோம் என்று சொல் வதால் அவர்கள் இந்த நிலயங்களை அபிவிருத்திக்குக் கொண்டுவராமலிருக் கிறார்கள். இராமங்களில் மின்சாரத்தை அபிவிருத்தி செய்யாமல் மின்சார நிலயங்களை நீடித்து விஸ்தரிக்கும் திட்டத்தை நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள் அதன் காரணமாக இராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்காமல் உற்பத்தி பெருக்குக்கு இடையூராக இருக்கிறது.

"வெளிநாட்டு தொழில்களை யெல்லாம் தேசியமயமாக்க வேண்டு மென்று சொன்னால் வெளி நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்றவர்களும், வெளி நாட்டு மூலதனமும் தேவை என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக இப்பொழுது அநேகம் முனிசிபாலிட்டிகள் மின்சார நிலயங்களை நடத்திவரு

இன்றன. மின்சார நிலயங்களை நடத்துவதில் அவர்களுக்குக் கொஞ்சம் லாபம் கிடைத்து வருகிறது. இந்த விதம் நடத்தும் பல முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. இந்த முனிசிபாலிட்டிகளிடமிருந்து மின்சார நிலயங்களை சர்க்கார் எடுத்துக் கொள்வதென்று திட்டமிட்டால் அந்த முனிசிபாலிடிகள் ஆட்சேபிக்கிறார்கள் அவ்விதம் ஆட்சேபித்து கூட ஹைகோர்ட்டில் கேஸ் போட்டு அதுவும் சர்க்காருக்கு விரோதமாக தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே இந்த திட்டத்தை கைவிடவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்னும் இந்த மின்சார நிலயங்களை சர்க்கார் எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு நஷ்டம் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. நஷ்டமாக கொடுக்கப்படும் பணத்தை மூலதனமாகக் கொண்டு புதிய நிலயங்களை அமைக்கவேண்டும். மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கும், புதிய ஸ்தாபனங்களைக் கொண்டுவருவதற்கும் இந்த பணத்தை பிரயோசனப் படுத்திக்கொள்ளலாம். இந்த முறையை கடைப்பிடித்தால் கண்டிப்பாக நாட்டில் விவசாயத்தில் அபிவிருத்தி செய்து கொடுக்கமுடியும். ஆனால் இந்த பொருளாதார நெருக்கடியில் புது நிலயங்களை அமைப்பதற்கு அதிகப்படியான பணத்தை செலவு செய்யமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் ஏற்கனவேயுள்ள நிலயங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டு அவைகளுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கும் பணத்தை எடுத்து புதிய நிலயங்களை ஆரம்பிப்பதற்கும், விஸ்தரிப்பதற்கும் உபயோகப்படுத்தவேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சென்ற ஐந்து ஆண்டுகளாக பருவமழை சரியாக பெய்யாத காரணத்தால் வருஷத்தில் நான்கு மாதங்களுக்கு மின்சார தட்டு ஏற்பட்டு அதனால் பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது கோயம்பத்தூர், மதுரை, தூத்துக்குடி முதலிய இடங்களில் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த மின்சார தட்டு ஏற்படுவதனால் அந்த தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. அங்கே வருஷத்திற்கு நூறு நாட்களுக்கு மேல் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படுகிறது, அதை உத்தேசித்து, கனம் K. T. ராஜா அவர்கள் கூட சொன்னார். இந்த மின்சார தட்டுகள் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அங்கங்கே Thermal stationகளை ஏற்படுத்த வேண்டுமென்று. அதற்கு கனம் தொழில் மந்திரி அவர்கள் சரியாக பதில் சொல்லவேயில்லை. அதையே தான் நானும் சொல்லுகிறேன். கோயம்பத்தூர் தூத்துக்குடி, விக்ரமசிங்கபுரம் முதலிய இடங்களில் Thermal stationகளை ஏற்படுத்தி மின்சார தட்டு ஏற்படாமல் தொழிற்சாலைகளை பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது மதுரையில் ஒரு Thermal station ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. மதுரையில் மட்டுமல்ல, இப்பொழுது சென்னையிலும் இருக்கிறது. இதனால் பைகாராவில் மின்சார தட்டு ஏற்பட்டால் சென்னையில் தட்டு ஏற்படாமலிருக்கும் பொருட்டு வசதி செய்து கொள்வதற்கு வழி இருக்கிறது. ஒரு Thermal station அமைத்துக் கொண்டால் தட்டு ஏற்பட்டாலும் அதை சமாளித்துக் கொள்ள முடியும். மதுரையில் Thermal station ஏற்படுவதற்கு இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நஷ்டஈடு கொடுக்கும் பணத்தை எடுத்து, அதாவது ஏற்கனவேயுள்ள நிலயங்களை எடுத்துக் கொள்வதற்குக் கொடுக்கும் நஷ்டஈடு பணத்தை எடுத்து இந்த Thermal station ஏற்படுத்துவதற்கு உபயோகப்படுத்தவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1 p.m. "அடுத்தபடியாக மின்சார நிலயங்களில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளின் நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கிறது. அங்கிருக்கும் ஊழியர்களுக்கு போதிய சம்பளம் கிடையாது. அதைப்பற்றி சர்க்காருக்கு சொல்ல தேவையில்லை. எல்லா ஊழியர்களும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மின்சார தொழிற்சாலைகளில் வேலை பார்க்கின்றவர்கள் மிகவும் அபத்தான நிலையிலிருக்கிறார்கள். 100, 200 அடி உயரத்தில் மரத்தில் ஏறி மின்சார கம்பியில் வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. அவ்விதம் உயரத்தில் ஏறி கம்பிகளை கட்டவேண்டியதாக இருக்கிறது. நடுக்காட்டில் ஒரு மனிதர் சஞ்சாரம் இல்லாத இடங்களில் 4, 5 மைல்கள் செல்லவேண்டியதா

இருக்கிறது. அவர்களுக்குப் போதிய அளவு சம்பளம் இல்லை. அவர்களுக்கு வெளியில் சென்று வேலை செய்யும் காலங்களில் தருந்த daily allowance-ம் travelling allowance சம்பளமும் கொடுக்கவேண்டும்.

"இப்பொழுது மேட்டூரிலிருக்கும் Electric Workshop-ல் சுமார் 600 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய அடிப்படை சம்பளம் ரூ. 18-ம், dearness allowance ரூ. 19-ம் கொடுக்கப்படுகிறது. இதை வைத்துக்கொண்டு அவர்கள் எவ்விதம் காலக்ஷேபம் பண்ண முடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். மற்றும் அவர்கள் 5, 6 வருஷங்களாக வேலை பார்த்து வருதும் அவர்களை இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. ஐந்து, ஆறு வருஷங்களாக சர்க்கார் டிபார்ட்மெண்டில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு நிரந்தரமாக்கப்படவில்லையென்றால் அவர்கள் எவ்வாறு வாழ்ந்திருக்க முடியும்? உடனடியாக Electricity Department-ல் இருக்கக்கூடிய எல்லா சிப்பந்திகளையும், கீழ் சிப்பந்தியாக இருந்தாலும் சரி, சிப் எஞ்சினியராக இருந்தாலும் சரி, ஒரு வருஷத்திற்கு மேல் வேலை செய்திருந்தால் கண்டிப்பாக அவர்களை நிரந்தாமாக்கப்படவேண்டும். அதாவது அவர்களை permanent செய்யவேண்டும். இப்பொழுதுள்ள புதிய திட்டப்படி நிலயங்களை நிறுத்திவிடுவதாக திட்டமிடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக பல இடங்களில் பலரை வேலையிலிருந்து நீக்கப்படலாம். தொழிலாளர்களை யும் வேலையிலிருந்து நீக்குவதற்கான முயற்சியிலீடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை உடனே permanent செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். புதிய திட்டங்கள் ஆரம்பிப்பதன் மூலமாக அதிகமான ஆட்களுக்கு வேலை கொடுக்கமுடியும் என்பதுடன், electricity-யை அதிகம் உற்பத்தி செய்வதன் மூலமாகவும் நாட்டின் விவசாயிகளுக்கு அதிகமான வசதி செய்து தரமுடியும் என்ற முறையில் இருக்கவேண்டும். இந்த வகையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும்.

